வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    09.01.2024 செவ்வாய்க்கிழமை    இதழ் : 09    பக்கங்கள் : 12

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிறாம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# பெப். 01 முதல் சகலருக்கும் வரிக்கோப்பு கட்டாயமானது

## அறிவித்தார் நிதி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஜனவரி 09

**எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் அனை வருக்கும் வரிக்கோப்பு இலக்கம் கட்டாயமானது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடை பெற்று வருகின்றன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

அத்துடன், இந்த நாட்டில் வருமான வரி செலுத்தக்கூடியவர்கள் 10 இலட்சம் பேர் இருந்தும் 5 இலட்சம் பேர் மாத்திரமே வரி செலுத்தி வருகின்றனர். இதனால், மறைமுக வரியை குறைக்கவும், நேரடி வரியை அதிகரிக்கவும், வரி ஏய்ப்பு செய்யும்

11



வடக்கில் முதன்முறையாக

## 86 கோடி ரூபாய் பெறுமதியான அபின் போதைப்பொருள் மீட்பு!

வடமராட்சி, ஜன. 09

வடக்கில் முதன்முதலாக அபின் போதைப்பொருள் அதிகளவில் பருத்தித்துறையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி சுமார் 86 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்தம் நடைபெறும் கடல் பரப்பில் தண்ணீருக்கு

11

## வரியை அதிகரிக்குமாறு மக்களே கோரினார்கள்!

### நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, ஜன. 09

தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்தோம். அந்தக் காலப்பகுதியிலேயே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய பின்னணியில் வரியை அதிகரிக்குமாறு மக்கள் கோரினர். ஆனால், தற்போது வரியை அதிகரிக்கும் போது எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் - இவ்வாறு கூறியுள்ளார் நாமல் ராஜபக்ஷ எம். பி.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின்

11



திருகோணமலையில் தைப்பொங்கலை முன்னிட்டு நடைபெறும் கலாசார விழாவில் நேற்றைய தினம் 1,500 கலைஞர்கள், மாணவிகள் பங்கேற்று நடன நிகழ்வை முன்னெடுத்திருந்தனர். இந்த நிகழ்வில் 1008 பானைகளில் பொங்கலும் நடைபெற்றது.

## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

கிளிநொச்சி, ஜன. 09

ஆலயத்தில் தேர் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

கிளிநொச்சி - வட்டக்கச்சியில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தேர் கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்த

11

## அரச ஊழியர்களுக்கு ரூ. 5000 ஊதிய உயர்வு

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜன. 09

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழிந்தபடி அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் ஊதிய உயர்வில் 5 ஆயிரம் ரூபாயை இந்த மாதம் முதல் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மிகுதி 5 ஆயிரம் ரூபாய் அதிகரிப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அதிகரிக்கும் என்று அறியவருகின்றது.

இதேநேரம், மருத்துவர்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் இடையூறு

11

போராட்டத்தில் பங்கேற்ற வழக்கு:

## 3 எம்.பிக்கள் உட்பட எழுவரும் விடுதலை!

யாழ்ப்பாணம், ஜன. 09

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு வரையான பேரணியில் பங்கேற்ற மூன்று எம். பிக்கள் உட்பட 7 பேர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர்.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு வரை பேரணியை யாழ்., மட்டு. பல்கலைக்கழங்களின் மாணவர்கள் முன்னெடுத்தனர்.

இந்தப் பேரணியில் பங்கேற்றது சட்டவிரோதமானது என்று தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், சார்ள்ஸ்

11

ஹூதி கிளர்ச்சியாளரை அடக்க

## செங்கடலுக்கு செல்வதற்கு கடற்படை தயார் நிலை!

கொழும்பு, ஜன. 09

செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கையை கட்டுப்படுத்தி சர்வதேச கப்பல்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட கடற்படையினருடன் கப்பல் ஒன்று அங்கு செல்லவுள்ளது என்று கடற்படையின் பேச்சாளர் கயன் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

சரக்கு கப்பல்களை பாதுகாப்பதற்காக செங்கடல், அரபிக்கடல், ஏடன்வளைகுடா மற்றும் அதனை அண்டிய கடல் பாதைகளில் இந்தக்

11

## புத்தர் சிலையுடன் மிதவை ரதம் குடாரப்பில் கரையொதுங்கியது!

வடமராட்சி, ஜன. 09

புத்தரின் சிலையுடன் அலங்கரிக்கப்பட்ட மிதவை ரதம் ஒன்று நேற்று வடமராட்சி கிழக்கு - குடாரப்பில் கரையொதுங்கியது.

அண்மை நாட்களாக வட மராட்சி கிழக்கு மிதவைகள், மற்றும் மர்ம பொருட்கள் கரையொதுங்கி வருகின்றன.



இந்த நிலையிலேயே நேற்றைய தினம் புத்தர் சிலையுடன் அலங்கரிக்கப்பட்ட மிதவை ரதம்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை தமிழர் தரப்பில் நிறுத்தவேண்டும் என்பது பற்றி சில மாதங்களுக்கு முன்னர் நமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ஐக்கிய தமிழ் தேசியக் கூட்டணி) ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. வழக்கம்போலவே தீர்மானத்துடன் அந்த விவகாரம் நின்றுவிட்டது.

ஆனால், நீண்டகாலத்துக்கு பிறகு, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன், அதுகுறித்து கருத்துத் தெரிவித்திருந்ததுடன், அனைவரும் இணைந்து கேட்டால் போட்டியிடுவது குறித்துப் பரிசீலிக்க தான் தயாராக இருக்கிறார் என்று அறிவித்தார்.

வழக்கம்போல மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ன முடிவை எடுக்கின்றனவோ அதற்கு எதிராகவே முடிவெடுத்து பழக்கப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலை பகிஷ்கரிக்கும் முடிவை அறிவித்ததுடன், தமிழ் பொதுவேட்பாளர் என்பது குறித்த தமது ஊகங்களையும் வெளியிட்டிருந்தனர்.

கடைசியாக யாழ்ப்பாணம் வந்திருந்த தமிழரசு கட்சியின் மட்டக்களப்பின் இளம் பாராளுமன்ற உறுப்பினரோ, தமிழ் பொதுவேட்பாளர் என்பது சிலர் தமது தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தி எடுக்கும் முயற்சி - என்றார்.

இப்படியொரு முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்தபோது, அவர்கள் ஒரு விடயத்தை கோடிட்டுக் காட்டியிருந்தனர்.

இன்றைய அரசியல் நிலைமையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் ஐம்பது சதவீத வாக்குகளைப் பெறப்போவதில்லை என்பதால் சிறுபான்மையினர் வாக்குகளே தீர்மானிக்கும் வாக்குகளாக இருக்கப்போகின்றன. அதேவேளையில், தேர்தலில் இரண்டாம்கட்ட வாக்கு எண்ணிக்கை நடைபெறுவதற்கே சந்தர்ப்பம் அதிகமாக இருக்கின்றது.

இரண்டாவது வாக்கு எண்ணிக்கை என்பது வாக்காளர்கள் தமது இரண்டாவது தெரிவாக முதல் இரண்டு இடங்களில் வந்த யாருக்காவது வாக்களித்திருந்தால் அந்த வாக்குகள் அவர்களுக்கு சேர்க்கப்படும்.

ஜனாதிபதி தேர்தலில் எமது மக்கள் எப்போதுமே இரண்டாவது தெரிவை தெரிவு செய்வதில்லை. அதற்குக் காரணம், தேர்தலில் போட்டியிடுகின்ற எந்த வேட்பாளரும் தனது வெற்றி வாய்ப்பில் சந்தேகம் தெரிவிப்பதில்லை.

இன்றைய நிலையில் ரணில், சஜித், அநுர என்ற மூன்று பிரதான வேட்பாளர்களையும் எடுத்துக்கொண்டால், சஜித், அநுரவுக்கு வாக்களிக்கும் வாக்காளர்களை நோக்கி, நீங்கள் எனக்கு உங்கள் இரண்டாவது தெரிவையாவது வழங்குங்கள் என்று கேட்கப்போவதில்லை. அதேபோல அநுரவும் சஜித்துக்கு வாக்களிப்பவர்களை நோக்கி இரண்டாவது தெரிவாக தனக்கு வாக்களியுங்கள் என்று கேட்கப்போவதில்லை. அப்படிக் கேட்பதே அவர் தனது வெற்றியில் நம்பிக்கை கொள்ளவில்லை என்பதைப் பகிரங்கமாகக் கூறுவதாகிவிடும். இதனால் எந்தவொரு வேட்பாளரும் தனக்கு இரண்டாவது தெரிவாக வாக்களியுங்கள் என்று கேட்கப்போவதில்லை.

ஆனால், தமிழ் மக்கள் தரப்பில் போட்டியிடும் பொதுவேட்பாளர் ஜனாதிபதி ஆவதற்காகப் போட்டியிடவில்லை. அவரின் நோக்கம் எல்லாம், தமிழ் மக்கள் எத்தகைய தீர்வை வேண்டிநிற்கிறார்கள் என்பதை முழு நாட்டுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் வாக்குகள் மூலம் சொல்வதே. அவ்வாறு சொல்லும் அதேவேளை, எமது கோரிக்கையை ஏற்றுக்கொள்கின்ற - ஆகக்குறைந்த ஒரு தீர்வுக்காவது சம்மதிக்கின்ற ஒரு வேட்பாளருக்கு தமது இரண்டாவது வாக்கை வழங்குங்கள் என்று கோரிக்கை விடுக்கலாம். அதற்காக ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்ற நிலையை பிரதான வேட்பாளர்களுக்கு ஏற்படுத்தலாம்.

அதற்காகவே தமிழ் பொது வேட்பாளர் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

அப்படியெனில், அதற்கு எதற்காகப் போட்டியிட வேண்டும்? உடன்பாட்டுக்கு வருகின்ற வேட்பாளருக்கே நேரடியாக ஆதரவு வழங்கலாமே என்று சிலர் வாதிடுகின்றனர். உண்மைதான், ஆனால், அப்படி ஆதரவு வழங்குகின்போது தமிழ் மக்களின் விருப்பம் என்ன என்பதைத் தெரிவிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும் அல்லவா.

இதனால்தான் தமிழ் பொது வேட்பாளர் என்ற கோரிக்கையை கூட்டமைப்பும் முன்வைத்திருக்கலாம். இப்போது செல்வமும் அதுபற்றி தனது கருத்தை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

இது பற்றி சில நாட்களுக்கு முன்னர் பேசிய தமிழ்க் கட்சி ஒன்றின் தலைவர் ஒருவரிடம் கேட்டேன், 'நீங்களே ஏன் போட்டியிடக்கூடாது?' என்று,

அவர் சொன்னார், 'பிறகு மக்கள் வாக்களிக்காமல் விட்டு விட்டால், நானும் ஒரு சிவாஜிலிங்கம் மாதிரி அல்லவா போய்விடுவேன்' என்று.

தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றாக முடிவெடுத்து ஒரு வேட்பாளரை நிறுத்தினாலும் தமிழ் மக்கள் வாக்களிப்பார்களா என்ற சந்தேகம் நமது தலைவர்களுக்கு இருக்கிறது என்றால் அவர்கள் இன்னமும் எதற்காக மக்கள் மத்தியில் அரசியல் செய்கிறார்கள் என்பது அவர்களுக்கு மட்டுமே வெளிச்சமானது.!

- ஊர்க்குருவி.

## சமூகத்தை சீரழிக்கும் நபர்களின் மத நம்பிக்கையை ஆராய குழு!

### அமைச்சர் விதுர கூறுகிறார்



கொழும்பு, ஜன. 09

சமூகத்தை சீரழிக்கத் தூண்டும் நபர்களின் மத நம்பிக்கைகள் குறித்து ஆராய அமைச்சரவை குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

மத போதனைகளை திரிபுபடுத்தும் மற்றும் சமூகத்தில் பதற்றத்தை உருவாக்கும் செயல்களை தடுக்கவும் அகற்றவும் அரசாங்கம் புதிய சட்டங்களை இயற்றும் என்றும் அமைச்சர் கூறினார்.

நாட்டின் சட்டக் கட்டமைப்புக்குள் அனைவரும் அவரவர் மதத்தை கடைப்பிடிக்கும் சூழலை உருவாக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## மானிப்பாய் இளைஞர்கள் இருவர் மறுவாழ்வு மையத்தில் சேர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 09

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதைப்பொருளுடன் கைதான இளைஞர்கள் இருவரையும் மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 24 மற்றும் 25 வயது இளைஞர்களை சட்ட மருத்துவ அதிகாரி முன் முற்படுத்தி மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது இருவரும் போதைக்கு அடிமையானவர்கள் என்று கண்டறியப்பட்டது.

இதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளின் பின்னர்,

மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் இளைஞர்கள் இருவரையும் முற்படுத்தினர். இதன்போதே, அவர்களை கந்தக்காடு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்புமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ஐ)

## ஐஸ் போதைக்கு அடிமையான பெண்ணுக்கு விளக்கமறியல்!

வடமராட்சி, ஜன. 09

ஐஸ் போதைக்கு அடிமையான இளம் பெண்ணொருவர் பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் இரவுவேளை சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய பெண்ணை பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தினர். இதன்போது, அவர் போதைக்கு அடிமையானவர் என தெரியவந்துள்ளது.

இதனை தொடர்ந்து அந்தப் பெண்ணிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் போது, குறித்த பெண் தாய், தந்தை இல்லாத நிலையில், பேர்த்தியாருடன் வசித்து வருகிறார் என்றும் அவர் ஐஸ் போதைப் பொருளுக்கு அடியாகியுள்ளார் என்றும் தெரியவந்தது.

விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை, அப்பெண்ணை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## தயாசிறி ஜயசேகரவுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

கொழும்பு, ஜன. 09

சிறீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த மித்திரபால தனது பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயல்படுவதையும், இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தவறான பரிந்துரைகளை வழங்குவதையும் தடுக்கும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு எதிர்வரும் 21ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதானகே உத்தரவிட்டுள்ளார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அதன் பதில் செயலாளர் நாயகம் சாரதி துஷ்மந்த மித்திரபால ஆகியோர் சமர்ப்பித்த மனுவை பரிசீலித்தபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 97 குடும்பங்களுக்கு உலருணவு



வடமராட்சி, ஜன. 09

தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 97 குடும்பங்களுக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் உலர் உணவுப்பொதிகளை வழங்கியது.

அம்பாறையின் லகுகலை பிரதேச செயலர் பிரிவின் பாணம வடக்கை சேர்ந்த 62 குடும்பங்களுக்கும் பாணம கிழக்கை சேர்ந்த 35 குடும்பங்களுக்கும் நேற்று திங்கட்கிழமை 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிவாரணப்பணிகளை ஆச்சிரமத்தின் முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாக சென்று வழங்கிவைத்தார். (ஐ-02)

ஈழநாடு
Eelanadu
09.01.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழரசு கட்சியின் போட்டி

தமிழரசு கட்சியின் அடுத்த தலைமைக்கான போட்டி தீவிரமடைந்திருப்பதாகத் தெரிகின்றது. தமிழரசு கட்சி என்பது தமிழ்த் தேசிய அரசியலில் பிள்ளையார் சுழியாக நோக்கப்படும் ஒரு கட்சி. எனினும், 1970களுக்கு பின்னரான அரசியல் சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழரசு கட்சியின் தேவை மீது கேள்விகளை எழுப்பின. இதனைத் தொடர்ந்தே, தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமானது. ஆயுதப் போராட்ட காலத்தில் தமிழ் மிதவாத அரசியலுக்கான தேவைகள் இருக்கவில்லை. மிதவாதிகளின் கையில் அரசியல் இருக்கவில்லை. ஆனால், 2009இற்கு பின்னர் மீண்டும் தமிழ்த் தேசிய அரசியல் மிதவாதிகளின் வசமானது.

2009இற்கு பின்னரான தமிழரசு கட்சி என்பது முற்றிலும் சம்பந்தனது கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஆனால், போருக்கு பின்னரான மிதவாத அரசியலுக்கான பொருத்தமான – ஆற்றலுள்ள தலைமை ஒன்றை சம்பந்தன் வழங்கவில்லை. வெறுமனே தன்னை முன்னிறுத்துவதற்கே சம்பந்தன் கட்சியைப் பயன்படுத்தியிருந்தார். தனக்குப் பின்னரான தலைமைத்துவம் தொடர்பிலும் சம்பந்தன் சிந்திக்கவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தற்போது அடுத்த தலைமைக்கான போட்டி உருவாகியிருக்கின்றது. மும்முனை போட்டியாகத் தெரிந்தது தற்போது இருமுனைப் போட்டியாக மாறியிருக்கின்றது.

தற்போது தமிழரசு கட்சிக்குள் இடம்பெறும் போட்டி தமிழ் தேசியத்துக்கும் தமிழ்த் தேசிய நீக்கத்துக்கும் இடையிலான போட்டியாக மாறுவது போல் காட்சியளிக்கின்றது. ஆனால், சம்பந்தன் இந்தப் போட்டியை தடுத்து நிறுத்தி முன்னையவர்களிடமே கட்சியை ஒப்படைக்க முயற்சித்து வருகின்றார். எனினும், சம்பந்தன் எதிர்பார்ப்பது நடக்காமல் போகும் போது, போட்டி நிச்சயம் இடம்பெறும். ஒருவேளை சம்பந்தனின் நகர்வு வெற்றியளித்தால் போட்டி இடம்பெறாமல் போகலாம்.

இந்தப் போட்டி ஒரு கட்சியின் உள்விவகாரமாக இருந்தாலும்கூட, தமிழ் மக்களின் பெருவாரியான ஆதரவைப் பெற்றிருக்கும் கட்சியென்னும் அடிப்படையில் தமிழரசு கட்சியின் அடுத்த தலைமை யார் என்பதைப் பொறுத்தே அந்தக் கட்சியின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும்.

ஒரு கட்சியின் தலைமைக்கு வரலாற்று பொறுப்புண்டு. அதனை உணர்ந்திருக்கும் தலைமையே உண்மையான ஓர் அரசியல் தலைமையாகும். ஆனால், சம்பந்தன் அந்த வரலாற்றுப் பொறுப்பை உணர்ந்து தமிழரசு கட்சியை வழிநடத்தவில்லை. இதேபோன்று, மாவை சேனாதிராசாவாலும் அவ்வாறானதொரு தலைமைத்துவத்தை வழங்க முடியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் புதிய தலைமையொன்று உருவாவது அந்தக் கட்சியின் எதிர்காலத்துக்கு சிறப்பானது. இதேவேளை, ஜனநாயக முறைப்படி ஒரு தலைமை உருவாவதும் சிறப்பானது. அப்போதுதான் கட்சியின் தொண்டர்கள் மத்தியில் கட்சிக் கட்டமைப்புகள்மீது பிடிப்பும் – பொறுப்பும் ஏற்படும். அதேவேளை, கட்சியின் கட்டமைப்புகளிலிருந்து இளம் தலைவர்கள் உருவாவதற்கான வாய்ப்பும் உருவாகும். அந்த வகையில் போட்டியின் அடிப்படையில் ஒரு தலைமை தெரிவாவதுதான் சிறப்பானது.

தமிழரசு கட்சியின் தலைமைக்கான போட்டி என்பது நீண்ட காலத்துக்குப் பின்னர், தமிழ்த் தேசிய ஜனநாயக அரசியல் புத்துணர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. தெரிவு செய்யப்படுபவர் எவராக இருந்தாலும் – அவர் தமிழரசு கட்சியில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தி அதனை அடுத்த தலைமுறையிடம் ஒப்படைப்பவராக இருக்க வேண்டும். அதற்கான பொறுப்புணர்வும் – சகிப்புணர்வும் – விட்டுக்கொடுப்பும் ஏனைய கட்சிகளை அரவணைத்து செயல்படக்கூடியவராகவும் இருக்க வேண்டும். தற்போதுள்ள வடக்கு – கிழக்கு அரசியல் சூழலில், தமிழரசு கட்சியால் மட்டும் தமிழ்த் தேசிய அரசியலை வழிநடத்த முடியாது. ஏனைய தமிழ்த் தேசிய தரப்புகளுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம்தான் விடயங்களை முன்னோக்கி நகர்த்த முடியும்.

# வடக்கு தமிழ் மக்கள் ரணிலை ஒருபோதும் நம்பமாட்டார்கள்!

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வடக்கு மாகாண மக்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு வடக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை வடக்கு மாகாணத்துக்கு நான்கு நாள் பயணம் மேற்கொண்டிருந்தார். வாக்கு அரசியலுக்காகவே ஜனாதிபதி வடக்கு மாகாணத்துக்கு சென்றார்.

அவரின் வருகையை வடக்கு மக்கள் விரும்பவில்லை. அவர்கள் வீதிகளில் நின்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக போராடுகின்றார்கள். ரணிலை வடக்கு மக்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு வடக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

வடக்கு மக்கள் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியையே ஆதரிப்பார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு அதிகப்படியான வாக்குகளை வடக்கு மக்கள் அளித்தார்கள்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் அதைவிடப் பெருமளவிலான வாக்குகளை சஜித் பிரேமதாஸவுக்கு வடக்கு மக்கள் வழங்குவார்கள். இம்முறை சஜித் பிரேமதாஸவின் வெற்றியில் வடக்கு மக்களின் பங்கு முக்கிய இடம் வகிக்கும் - என்றார்.

(ஐ)

# லசந்த படுகொலையுடன் தொடர்புடையோர் தாமதமின்றி பொறுப்புக்கூற செய்யுங்கள்!

## அரசை வலியுறுத்துகிறது மன்னிப்பு சபை

புதுடில்லி, ஜன. 09

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில், அந்தப் படுகொலையுடன் தொடர்புடையவர்களை தாமதமின்றி பொறுப்புக்கூற செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளரும் “சண்டே லீடர்“ பத்திரிகையின் ஆசிரியருமான லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அவரின் படுகொலையாளிகள் இன்னமும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்பு சபை, “15 வருடங்களுக்கு முன்னர் இதே போன்றதொரு நாளில் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டார். இவ்வழக்கை உள்ளக ரீதியில் தீர்ப்பதாக இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்திருக்கின்ற போதிலும், வழக்கு விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன“ என்று சுட்டிக்காட்டியுள்ளது.


அதுமாத்திரமன்றி லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ச்சியாக போராடிவரும் அவரது குடும்பத்தினருக்கு இன்றைய திகதி வரை நீதி வழங்கப்படவில்லை எனவும் மன்னிப்பு சபை விசனம் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், லசந்தவின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் தண்டனைகளிலிருந்து விடுபடுவதை உடன் முடிவுக்குக் கொண்டு வருமாறும் அவர்களைத் தாமதமின்றி பொறுப்புக்கூற செய்யுமாறும் மன்னிப்பு சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. (ஐ)



தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் திருநெல்வேலி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற பி.முத்துலிங்கத்தின் “அரசியல் பொருளாதாரம், தத்துவம் - ஒரு பார்வை“ நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று நடைபெற்ற போது...!

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.

**இடபம்**

சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மிதுனம்**

சமயோசிதமாக பேசிகாரியம் சாதிப்பீர்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித்தருவார்.

**கடகம்**

குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். ஆடம்பரச் செலவுகளை வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். புது பொறுப்பை ஏற்பீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**

நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் சில உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**துலாம்**

கணவன் மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். புத்துணர்ச்சி பெருகும்நாள்.

**விருட்சிகம்**

ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். நேர்மறை எண்ணங்கள் தேவைப் படும் நாள்.

**தனுசு**

குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மகரம்**

குடும்பத்தில் மனம் விட்டு பேசுவீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். நண்பர்களால் ஆதாயம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். பெருந்தன்மையுடன்நடந்துக் கொள்ளும் நாள்.

**கும்பம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உங்களை நம்பி சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும்.

**மீனம்**

குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். சக ஊழியர்கள் மதிப்பார்கள். மன நிறைவு கிட்டும் நாள்.

# சட்டமன்றத் தேர்தலிலும்கூட பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை!

## அ. தி. மு. க. கட்சி அறிவிப்பு

*சென்னை, ஜன. 09*

எதிர்வரும் பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தலில் பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை என திட்டவட்டமாக அறிவிக்கிறேன் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று எஸ். டி. பி. ஐ. கட்சியின் மாநாட்டில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

“எஸ். டி. பி. ஐ. கட்சியின் மாநாட்டின் கூட்டத்தை பார்க்கும் போது அ. தி. மு. க. வெற்றி உறுதி செய்யப்பட்டது. தி. மு. க. கூட்டணி மதச்சார்பின்மையை கடைப்பிடித்து வருவதாக போலி பிம்பத்தை உருவாக்கி வருகிறார்கள். அ. தி. மு. க. கிளை செயலாளராக இருந்து தவழ்ந்து உயர் பதவிக்கு வந்



துள்ளேன். என்னுடைய வளர்ச்சியை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கொச்சைப்படுத்தி பேசுகிறார்.

தி. மு. க. மத்தியில் ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு பல்வேறு கட்சிகளுடன் கூட்டணி வைத்துள்ளன. அ. தி. மு. க. ஒரு நாளும் கொள்கைகளை விட்டு கொடுக்காது. பா. ஜ. க. கூட்டணியில் இருந்து வெளியே வந்ததை முதலமைச்சர் ஸ்டாலினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கூட்டணியில் இருந்து வெளியே வந்த போதிலும் முதலமைச்சர் ஸ்டாலின் அ. தி. மு. கவையும், பா. ஜ. கவையும் தொடர்புபடுத்தி பேசி வருகிறார். நான்கரை ஆண்டு காலம் ஆட்சியை நடத்துவதற்கு மிகவும் துன்பப்பட்டேன்.

அ. தி. மு. கவுக்கு எதிராக வாக்கு அளித்த போதும் அ. தி. மு. க. ஆட்சி நிலைத்து நின்றது. எதிராக வாக்களித்தவரையும் சமாளித்து தான் அதிமுக ஆட்சி நான்கரை ஆண்டுகள் நடைபெற்றது. எதிர்வரும் பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தலில் பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை என திட்டவட்டமாக அறிவிக்கிறேன். பாராளுமன்றத் தேர்தலில் எஸ். டி. பி. ஐ. கட்சியோடு அ. தி. மு. கவுடன் நிறைய கட்சிகள் வரவுள்ளன. பாராளுமன்ற தேர்தலில் அ. தி. மு. க. 40 தொகுதிகளில் வெற்றி பெறும். சிறுபான்மை மக்கள் அ. தி. மு. கவுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.”- என்றார். (ஐ)

# பழனிசாமி விரைவில் சிறைக்கு செல்வார்

## பன்னீர்செல்வம் கூறுகிறார்

*சென்னை, ஜன. 09*

‘பழனிசாமி விரைவில் திஹார் சிறைக்கு செல்வார் என, நான் பேசியது குறித்து இப்போதைக்கு சொல்ல முடியாது. காரணம் அது பரம இரகசியம். ஆனாலும், உரிய நேரத்தில், உரிய இடத்தில் அதை சொல்வேன்,” என முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் கூறினார்.

எம். ஜி. ஆர். அடிமட்டத் தொண்டனும் கட்சியின் பொதுச் செயலாளராகும் விதத்தில் யாப்பை வகுத்தார். அதனை தகர்த்து, அடிப்படை தொண்டர்களின் உரிமையை பறித்து, பழனிசாமி பொதுச்செயலராகி கட்சியை கபளீகரம் செய்ய முயற்சிக்கிறார். இதை எதிர்த்து தொண்டர்கள் சார்பில் அ. தி. மு. க., மீட்புக்குழு கூட்டத்தை தமிழகம் முழுதும் நடத்துகிறோம்.

பழனிசாமி முதல்வராகி, பொதுச்செயலரான பின், அனைத்து தேர்தல்களிலும் தோல்வியையே சந்தித்துள்



ளார். அ. தி. மு. க., ஒன்று சேர்ந்து, தேர்தலை சந்தித்தால் தான் வெற்றி பெற முடியும்.

ஏற்கனவே, தினகரனுடன் இணைந்து விட்டோம். சசிகலாவும் எங்களுடன் இணைந்து செயல்படவுள்ளார் - என்றார். (ஐ)

# பாரதிய ஜனதாவை தோற்கடித்து ஜனநாயகத்தை பாதுகாப்போம்!

## திருமாவளவன் எம். பி. தெரிவிப்பு

*திருச்சி, ஜன. 09*

மத சார்பின்மை என்ற புள்ளியில் காங்கிரஸ் நம்முடன் கைகோத்து நிற்கிறது. வரும் மக்களவைத் தேர்தலில் பா. ஜ. கவை தோற்கடித்து, இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைத்து ஜனநாயகத்தை பாதுகாப்போம் - என்று திருமாவளவன் எம். பி. கூறினார்.

திருச்சியில் நடந்த மாநாட்டில் பேசிய, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன்,

ஆர். எஸ். எஸ்., சங் பரிவார் அமைப்பினர் தாங்கள் செயல்படுத்த நினைப்பதை சட்டம் மற்றும் நீதிமன்றம் மூலம் செய்கின்றனர். சட்டம், நீதிமன்றம் மூலம்அவர்கள் விரும்புவதை நடத்திக் கொள்ளும் இடத்தில் சங்பரிவார் அமைப்பு உள்ளது. பா. ஜ. கவை தோற்கடிப்போம் என்றால் ஆர். எஸ். எஸ்., சங்பரிவார் அமைப்பை, அவர்களின் கருத்தியலை தோற்கடிக்கிறோம் என்று பொருள். 1925-ம் ஆண்டு தொடங்கி நூற்றாண்டை கொண்டாட உள்ள ஆர். எஸ். எஸ். இயக்கம், இந்தியாவுக்கு இந்து ராஷ்டிரம் என பெயர் சூட்ட தயாராகி வருகிறது.

இந்தியாவை மதம் சார்ந்த நாடாக அறிவிக்கவும் அரசை மதம் ஆட்சி செய்ய வேண்டும் எனவும் விரும்புகின்றனர். இதற்கு தடையாக உள்ள இந்திய அரசியல் அமைப்பு சட்டம் தான் சங் பரிவார்களின் முதல் பகை. இந்துத்துவா என்பது சனாதனமும், பெருநிறுவன அரசியலும் சேர்ந்ததாக இங்கு உள்ளது. இந்துத்துவ நிகழ்ச்சிநிரலில் மத வெறுப்பு அரசியல் முன்னிறுத்தப்படுகிறது. இவர்கள் எதையும் செய்வார்கள் என்பதற்கு மோடியின் அனைத்து நடவடிக்கைகளும் சாட்சியாக உள்ளன

இப்படி ஓர் ஆபத்தான சூழலில் மக்கள் அதிகாரம் ஜனநாயகத்தை காக்க முக்கிய முடிவை எடுத்துள்ளது. மத சார்பின்மை என்ற புள்ளியில் காங்கிரஸ் நம்முடன் கை கோத்து நிற்கிறது. வரும் மக்களவைத் தேர்தலில் பா. ஜ. கவை தோற்கடித்து, இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைத்து ஜனநாயகத்தை பாதுகாப்போம் - என்றார். (ஐ)

# சமஷ்டி இலக்கை அடைவதற்கு தமிழ் பிரிவினைவாதிகள் சூழ்ச்சி

## பதறுகிறார் குணதாச அமரசேகர

கொழும்பு, ஜன. 09

**“பௌத்த பிக்குகளே இந்நாட்டில் ஒற்றையாட்சியின் காவலர்களாக இருந்துவருகின்றனர். இலங்கை சமஷ்டி நாடாவது அவர்களின் அழுத்தத்தால்தான் தடுக்கப்பட்டுவருகின்றது. இந்நிலையிலேயே தமிழ்ப் பிரிவினைவாதிகள் தற்போது பிக்குகளின் ஆதரவை பெறும் சூழ்ச்சி நடவடிக் கையில் இறங்கியுள்ளனர்.” - என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“நாடு பயங்கரமான நிலையை எதிர்கொண்டுள்ளது. இதற்கு முன்னர் இவ்வாறானதொரு நிலைமையை எதிர்கொள்ளவில்லை. ஜனாதிபதியின் படமொன்று அண்மையில் ஊடகத்தில் வெளியானது. ஒரு புறத்தில் பிக்குகள் எனக் கூறிக்கொள்ளும் சிலர் இருந்தனர். மறுபுறத்தில் உலகத் தமிழ் பேரவை உறுப்பினர்கள் இருந்துள்ளனர்.

இமயமலை பிரகடனம் எனக்கூறி பிரகடனமொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஆறு யோசனைகள் உள்ளன. இலங்கையை பெரடல் நாடாக்கி, அதன்மூலம் ஈழத்தை அடைவதே அதன் நோக்கமாகும்.



ஜனாதிபதியை சந்தித்த பின்னர் மகாநாயக்க தேரர்களையும் சந்தித்துள்ளனர். அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் இமயமலை பிரகடனத்துக்கு இணக்கம் என்ற தகவலை தற்போது அவர்கள் பரப்பி வருகின்றனர்.

தமிழ்ப் பிரிவினைவாதிகளின் தேவைக்கேற்ப இந்நாடு பெடரல் நாடாக மாறாமல் இருப்பதற்கு பிக்குகள் சமூகமே காரணம். நாட்டை அவர்கள் பாதுகாத்துவருகின்றனர். நாடு பிளவுபடுவதற்கு எதிராக மகா சங்கத்தினரே செயற்பட்டனர். ஒற்றையாட்சியைக் காக்க அவர்கள் பெரும் அர்ப்பணிப்புகளை செய்துள்ளனர். மன்னர் காலத்திலும் அவ்வாறு நடந்துள்ளது.

13 ஆவது முழுமையாக அமுல்படுத்த முடியாமல் இருப்பதற்கும் பிக்குகள் அழுத்தம் காரணம். இதனை தெரிந்துதான் பிக்கு சமூகம் தற்போது இலக்கு வைக்கப்பட்டுள்ளது. அதற்காகவே பிக்கு சமூகத்தின் ஆதரவை பெறும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இந்த இமயமலை பிரகடனத்துக்கு இணங்ககூடாது.” - என்றார். (அ)

# தொடர்மாடி கட்டடங்களில் வசிக்கும் 50 வீதமானோருக்கு உறுதிப்பத்திரம்

கொழும்பு, ஜன. 09

நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களில் 50வீத பேருக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் உறுதி பத்திரம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி இவ்வருட இறுதிக்குள் அதிகாரசபைக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியேறிய 50 வீத பேருக்கு உறுதி பத்திரம் வழங்கப்படுமென நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புகளில் தற்போது 14,542 பேர் வசித்து வருவதாகவும், இதன்படி முதற்கட்டமாக 50 வீதமானவர்களுக்கு உறுதி பத்திரம் வழங்கப்பட உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த கொள்கைப் பிரகடனத்தில், அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்களுக்கான உரிமைப் பத்திரங்களை வழங்குவது துரிதப்படுத்தப்படும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# கடவுச் சீட்டு பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 09

அந்தவகையில், 9 இலட்சத்து 10,497 இலங்கையர்கள் வெளிநாடு செல்வதற்கு தயாராகி கடவுச்சீட்டைப் பெற்றதாக குடிவரவுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டில் கடவுச்சீட்டு வழங்கியதன் மூலம் திணைக்களம் 4,100 கோடி ரூபாயை ஈட்டியுள்ளது

மேலும் பத்தரமுல்லை, வவுனியா, கண்டி, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் அமைந்துள்ள குடிவரவு பிராந்திய அலுவலகங்கள் அந்த சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கான முதலீட்டுத் தளமாக மாறுகின்றதா பூநகரி?

## கஜேந்திரன் எம்.பி.கேள்வி

யாழ்ப்பாணம், ஜன. 09

பூநகரி அபிவிருத்தி திட்டம் தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கான முதலீட்டு தளமாக மாற்றப்படுகிறதா என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பூநகரி, கிளிநொச்சி அல்லது வடக்கைச் சேர்ந்தவர்களுக்கு அங்கு முதலீடுகளை செய்வதற்கும் வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கும் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு பூநகரியை அபிவிருத்தி செய்வதாக இருந்தால் வெளி பிரதேசங்களில் உள்ள மக்கள் அங்கு வந்து மீள்குடியேறுவதற்கான உட்கட்டுமான வசதிகள் தேவை என்றபோதும் அது பற்றி எதுவும் இதில் குறிப்பிடப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் 500 மில்லியன் ரூபாய் அவசர அவசரமாக ஒதுக்கபடபட்ட போதும் பூநகரி அபிவிருத்தி திட்டம் குறித்து அப்பகுதி மக்களுடன் எந்தவொரு கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என்றும் செல்வராசா கஜேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

2017 ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க பிரட்டிகமராக இருந்த போது மயிலிட்டி துறைமுக அபிவிருத்தி இடம்பெற்றது என்றும் இது பின்னர் மத்திய துறைமுக அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டதால் தொழில் செய்த நிலங்களை அந்த மக்கள் இழக்க வேண்டி ஏற்படாது என்றும் கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# போதை மாத்திரைகளை விற்பனை செய்த மருந்தக ஊழியர் உட்பட இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 09

யாழ்ப்பாணத்தில் போதை மாத்திரைகளை (வலி நிவாரணி) விற்பனை செய்து வந்த கும்பலை இலக்காக வைத்து முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் நகரில. பிரபல மருந்தகம் ஒன்றின் ஊழியர் உள்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிரபல மருந்தகத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போதும் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் வியாபார நோக்கத்துடன் ஆயிரத்து 100 போதை மாத்திரைகளுடன் நடமாடிய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பிரபல மருந்தகத்தின் ஊழியர் என விசாரணையில் தெரியவந்தது.



அதனடிப்படையில் மருந்தகத்தில் முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் மேலும் இரண்டு பெட்டிகளில் சுமார் 250 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. குறித்த மாத்திரைகள் வலி நிவாரணியாக அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் இருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் மீதும் மருந்தகம் மீதும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்தவின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் தெ. மேனன் தலைமையிலான மாவட்ட குற்ற விசாரணை பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (அ)

# மதுபானசாலை ஆரம்பிக்கும் ஒருவர் ஒரு கோடி ரூபா வைப்பிலிடவேண்டும்

கொழும்பு, ஜன. 09

நாட்டில் மதுபானச்சாலை ஒன்றை ஆரம்பிக்கும் எந்தவொரு நபரும் ஆரம்ப கட்டணமாக ஒரு கோடி ரூபாவை வைப்பிலிட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

மதுபானச்சாலை ஒன்றை திறப்பதற்கு இதுவரையில் அத்தகைய அடிப்படைக் கட்டணம் அறவிடப்படவில்லை என்றும், மிகவும் சட்டபூர்வ



மான முறையில் மதுவரி உரிமம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பி4 உரிமத்திற்கு அதிக தேவை இருப்பதால், அந்த உரிமம் வழங்குவதற்கு அடிப்படைக் கட்டணமாக ஒரு கோடி ரூபாவை வைப்பிலிடவேண்டுமென அவர் கூறினார்.

சுற்றுலாத்துறையுடன் இணைந்து உரிமம் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்த நம்புவதாகத் தெரிவித்த அவர், இந்நாட்டின் பொது மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமையை படிப்படியாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# வீழ்ச்சியடையும் சனத்தொகை!

கொழும்பு, ஜன. 09

“எதிர்காலத்தில் நாட்டின் சனத் தொகை வெகுவாகக் குறைவடையலாம்” என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகக் கற்கைகள் பேராசிரியர் இந்திரலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் சனத் தொகை குறைவடைந்து வருவதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக இலங்கையில் பிறப்பு வீதம், 25 மூ குறைவடைந்துள்ளமை இதற்கு பிரதான காரணமாக உள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டில் பிறந்தவர்களின் எண்ணிக்கையுடன் 2022 ஆண்டை ஒப்பிட்டுப் பார்த்தால் பிறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 90,000 ஆகக் குறைந்துள்ளது.அதாவது 25மூ ஆகக் குறைந்துள்ளது. அதேவேளை நாட்டில் பிறப்புகளின் வீதம் குறைந்து இறப்புகளின் வீதம் வேகமாக அதிகரித்து வருகின்றன.

மேலும் இளம் சமூகத்தினர் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து வருதால் எதிர் காலத்தில் இலங்கையின் சனத்தொகை கனிசமான அளவு குறையலாம்- என்றார். (அ)

# பெயர் மாறினாலும் ஜே.வி.பியினரின் கொள்கை இன்னும் மாறவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜன. 09**
**“தமக்கு பயங்கரவாத வரலாறு இருப்பதாலேயே ஜே.வி.பி. கட்சியானது அப்பெயரில் வராமல் புதியதொரு பெயரில் வந்துள்ளது. பெயர் மாறினாலும் ஜே.வி.பியினர் கொள்கை இன்னும் மாறவில்லை.” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இந்நாட்டில் பொருளாதாரத்துக்கு பேரழிவை ஏற்படுத்தியவர்கள்தான் ஜே.வி.பியினர், எத்தனை தொழிற்சாலைகளை எரித்திருப்பார்கள்? எத்தனை ட்ரான்ஸ்போமர்களை கொளுத்தி இருப்பார்கள்? எத்தனை பஸ்களை எரித்திருப்பார்கள்? இந்நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை திறக்க அனுமதிக்கவில்லை. வெளிநாட்டு வருமானத்தை தடுத்தனர். இவ்வாறு பொருளாதாரத்துக்கு பேரழிவை ஏற்படுத்தியவர்கள்தான் ஜே.வி.பியினர். இன்று தமது பெயரை மாற்றிக்கொண்டு தேசிய மக்கள் சக்தியினர் என வெளியில் முகம் காட்டுகின்றனர். பெயரை மாற்றியதன் நோக்கம் என்ன?

ஊர் பகுதிகளில் உள்ள ரௌடிகள் சிறைக்கு சென்று மீண்டும் வரும்போது தமது பெயர்களை மாற்றிக்கொண்டே வருவார்கள். அதுபோலவே ஜே.வி.பி. இன்று என்.பி.பியாக வந்துள்ளது. தமது பயங்கரமான - பயங்கரவாத வரலாற்றால்தான் பெயர் மாற்றப்பட்டுள்ளது. ஆனால் ஜே.வி.பியினரின் கொள்கை மாறவில்லை. அடுத்த தேர்தலில் எமது கூட்டணியே வெற்றிபெறும். அதனால்தான் எம்மீது ஜே.வி.பியினர் விமர்சனங்களை முன்வைத்துவருகின்றனர்-என்றார். (அ)

# கடன் வழங்கிய நாடுகளுடன் விரைவில் புரிந்துணர்வு உடன்படிக்கை அவசியம்

## இலங்கையிடம் வலியுறுத்துகிறது ஜப்பான்

கொழும்பு, ஜன. 09

இலங்கைக்கும் கடன் வழங்கிய நாடுகளுக்கும் இடையில் விரைவில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகவேண்டும் என ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கைக்கும் கடன்வழங்கிய நாடுகளுக்குமிடையில் விரைவில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியதன் அவசியத்தை ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.

உத்தியோகபூர்வ கடனாளர் குழுவிற்கு வெளியே உள்ள கடன்வழங்குநர்களுடனான ஒப்பந்தங்களுடன் வெளிப்படைதன்மை மற்றும் ஒப்பீட்டுத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தையும் ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு கடன் வழங்கிய 15 நாடுகள் குழுவிற்கு ஜப்பான் இந்தியா பிரான்சுடன் தலைமை தாங்குவது குறிப்பிடத்தக்கது.

1948 இன் பின்னர் மிகமோசமான நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கை மிகவும் அதிகரித்த பணவீக்கம், நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி போன்றன காரணமாக 2022 இல் வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையை அடைந்தது.

கடந்த மாதம் நவம்பரில் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாக அறிவித்தன.

இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கிய சீனா இலங்கையுடன் இணக்கப்பாட்டை எட்டியுள்ளது எனினும் கடன்வழங்கிய நாடுகளின் உத்தியோகபூர்வ குழுவில் இடம்பெறவில்லை. (அ)

# காலி சிறைச்சாலையின் செயல்பாடு மட்டுப்படுத்தல்

கொழும்பு, ஜன. 09

காலி சிறைச்சாலையின் செயற்பாடுகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடக பேச்சாளர் காமினி பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலி சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு இடையில் மூளைக் காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மூளைக்காய்ச்சலுக்கான அறிகுறி களுடன் மேலும் 8 கைதிகள் அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, காலி கராபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவர் கடந்த 03 ஆம் திகதி மூளைக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார்.

இந்தநிலையில், காலி சிறைச்சாலையின் செயற்பாடுகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடக பேச்சாளர் காமினி பி திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (அ)

# பாடசாலை மாணவருக்கு இ.போ. ச. வழங்கிய பருவச் சீட்டுக்கள் இரத்து!

கொழும்பு, ஜன. 09

ஜனவரி மாதத்துக்காக பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையினால் வழங்கப்படும் பருவச் சீட்டுகளை இரத்துச் செய்யுமாறு அதன் பொது முகாமையாளர் டிப்போ முகாமையாளர்களுக்கு ஜனவரி 3 ஆம் திகதி அறிவித்துள்ளமையினால் பருவச் சீட்டுகளைப் பயன்படுத்தும் ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக பாடசாலை பாதுகாப்பு இயக்கத்தின் செயலாளர் நாகஸ்தன்னே அருண தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை தனது 66ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் நிலையில் பருவச் சீட்டுகளைப் பயன்படுத்த முடியாமல் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் ஏறிய பாடசாலை மாணவர்கள் ஜனவரி மாத்துக்கான பயணச்சீட்டை நடத்துநரிடம் காண்பிக்கும் போது இதை இரத்து செய்யுங்கள், பணத்தை எடுங்கள் என்று கூறுவதாகவும் அவர் கூறியுள்ளார். (அ)

# காணாமலாக்கப்பட்டோர் சங்க தலைவியின் விடுதலையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்





முல்லைத்தீவு, ஜன. 09

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மீதான பொலிஸாரின் அடாவடித்தனத்தை கண்டித்தும், வவுனியா மாவட்ட தலைவி ஜெனிற்றா விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரியும் முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாவில் ஜனாதிபதி வருகையின்போது நியாயம் கேட்கச் சென்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவி கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை விடுவிக்கக் கோரி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட் டில் நேற்று காலை 10.30 மணி யளவில் முல்லைத்தீவு புனித இராயப்பர் தேவாலயத்துக்கு முன்பாக ஆரம்பமானது.

குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக சென்று நிறைவு பெற்றிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ‘பொலிஸ் அராஜகம் ஒழிக’, ‘விடுதலை செய் விடுதலை செய் ஜெனிற்றாவை விடுதலை செய்’, ‘சர்வதேச விசாரணையே எமக்கான தீர்வு’, ‘ரணில் அரசே நட்ட ஈடு வழங்கி எமது போராட்டத்தை நிறுத்தக் கனவு காணாதே’, ‘பாதிக்கப்பட்ட உறவான ஜெனிற்றாவை உடன் விடுதலை செய்’, ‘ஜனநாயக வழியில் போராடுபவர்களை கைது செய்வதுதான் ரணில் அரசின் நல்லிணக்கமா?’, ‘சர்வதேச விசாரணையே எமக்கான தீர்வு’ போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்பினை வெளிப்படுத்தி கோஷங்களையும் எழுப்பினர்.

இப்போராட்டத்தில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள், காணாமலாக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஓட்டோவை அடித்து சென்றது வெள்ளம்; மரத்தில் சிக்கிய சாரதியின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜன. 09

கிராந்துருகோட்டை பிரதேசத்தில் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில் முச்சக்கர வண்டி சாரதி மரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கிராந்துருகோட்டை பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக உள்ஹிட்டிய நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

குறித்த முச்சக்கரவண்டியானது நேற்று முன் தினம் இரவு உல்ஹிட்டிய ஓயாவின் பாலத்தில் பயணித்துள்ளது.

பாலத்தில் பயணித்த முச்சக்கரவண்டி சாரதியுடன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இதனையடுத்து பாலத்தில் இருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மரத்திலிருந்து சாரதியின் சடலம் மீட்கப்பட்டது. (அ)

# ஸ்கானர் இயந்திரத்துடன் வைத்தியர் உட்பட மூவர் கைது

வவுனியா, ஜன. 09

வவுனியாவில் நேற்றுக் காலை பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரிடம், ஸ்கானர் இயந்திரம் ஒன்றை 15 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ய முயன்ற மூவரை பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட ஸ்கானர் இயந்திரம் மற்றும் அதற்காக பயன்படுத்தப்பட்ட 2 சொகுசு வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

34 வயதுடைய மதவாச்சியை சேர்ந்த வைத்தியர், 38 வயதுடைய வவுனியா மணிபுரம் பகுதியை சேர்ந்த ஒருவர், 31 வயதுடைய வவுனியா கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதவான் நீதிமன்றில் சந்தேக நபர்களை பொலிஸார் முன்னிலைப்படுத்தவுள்ளனர். (அ)

# எங்கள் தந்தை அறகலய போராட்டம் குறித்து பெருமிதம் அடைந்திருப்பார்!

## லசந்தவின் பிள்ளைகள்

**கொழும்பு, ஜன. 09**

**எங்கள் தந்தை அறகலய போராட்டம் குறித்து பெருமிதம் அடைந்திருப்பார் என படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் பிள்ளைகள் தெரிவித்துள்ளனர்**

**லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 15 வருடங்கள் ஆகின்ற நிலையில் அவரது நினைவேந்தல் நிகழ்வில் வாசிக்கப்பட்ட செய்தியில் அவர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.**

இலங்கையின் உணர்வுகளை உலுக்கிய சமாதானம் மற்றும் ஜனநாயகத்தை நேசிப்பவர்களின் இதயங்களை நொருக்கிய தீர்க்கரமான இழப்பின் போது 15 வருடங்களிற்கு முன்னர் எங்கள் தந்தை லசந்தவிக்கிரமதுங்க ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

எங்கள் தந்தை அமைதியை சமாதானத்தை ஏற்படுத்துபவர் மாற்றத்திற்கான வீரமிக்க போராளி.

இன்று அவரின் பெயர் மனித உரிமைகள் பத்திரிகை சுதந்திரம் சமூகநீதி மற்றும் மற்றும் சமத்துவத்திற்கான போராட்டத்துடன் அடையாளம் காணப்படும் பெயராக மாறியுள்ளது.

எங்களை பொறுத்தவரை நாங்கள் அவரை அன்புள்ள அர்ப்பணிப்புமிக்க தந்தையாக மாத்திரம் அறிந்துள்ளோம், எங்கள் குடும்பத்திற்காக தன்னை அர்ப்பணித்த எங்களின் ஆதரவு அமைப்பு-ஏனையவர்களிற்காக உயிர்வாழ்ந்தவர்.



எங்கள் குடும்பம் ஒன்றாக கூடும் ஒவ்வொரு தருணத்திலும் நாங்கள் அவருக்காக துயருகின்றோம், எங்கள் மேசையில் ஒரு காலியான ஆசனம் எப்போதும் காணப்படுகின்றது.

அவரின் மறைவிற்கு பின்னர் இலங்கை எதிர்கொண்ட இருள் மயமான ஒவ்வொரு காலகட்டத்திலும் நாங்கள் அவரின் இழப்பை உணர்ந்துள்ளோம்.

எங்கள் தந்தை அரகலய குறித்தும் அவரது செய்தியின் அடிப்படையில் உணர்வுகளின் அடிப்படையில் செயற்பட்டவர்கள் குறித்தும் தங்கள் உயிர்களிற்கான ஆபத்தை பொருட்படுத்தாமல் கொடுங்கோன்மையை எதிர்த்தவர்கள் குறித்தும் பெருமிதம் அடைந்திருப்பார்.

எங்கள் தந்தையை தொடர்ந்தும் நேசிப்பவர்களிற்கும் நீதிக்கான எங்கள் போராட்டத்திற்கு ஆதரவளித்தவர்களிற்கும் நாங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் தந்தை இன்று இல்லாதபோதிலும் எங்கள்துயரத்தையும் எங்கள் சீற்றத்தையும் அர்த்தபூர்வமான செயற்பாடாக மாற்றி இன்னமும் பூர்த்தி நிறைவேற்றப்படாமலிருக்கின்ற அவரின் நோக்கங்களை நிறைவு செய்வோம்.

எங்கள் தந்தையை கௌரவிப்போம் எங்கள் தாய்நாட்டில் வெளிப்படைதன்மை பக்கச்சார்பின்மை சகிப்புதன்மை சுதந்திரம் ஆகியவை குறித்த அவரது நோக்கத்தை நிறைவேற்றுவோம்.-என்று அதில் உள்ளது.

# டயானாவுக்கு எதிரான மனுவை பரிசீலிப்பதற்கு திகதி குறிப்பு

கொழும்பு, ஜன. 09

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யும் மனுவை நிராகரிக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் 19ஆம் திகதி கூடி பரிசீலிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சமூக ஆர்வலரான ஓஷல ஹேரத் சமர்ப்பித்த இந்த மனு நேற்று யசந்த கோதாகொட தலைமையிலான உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுவை இம்மாதம் 19ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்க வேண்டும் என்று உயர்நீதிமன்ற அமர்வு குறிப்பிட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரித்தானிய குடியுரிமை பெற்றவர் எனவும், அவர் இந்த நாட்டின் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க தகுதியற்றவர் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மனுவை விசாரித்த மூன்று நீதிபதிகள் கொண்ட மேல்முறையீட்டு நீதிமன்ற அமர்வின் பெரும்பான்மையான நீதிபதிகள் மனுவை தள்ளுபடி செய்ய முடிவு செய்ததாக மனுதாரர் கூறுகிறார்.

குறித்த மனுவை நிராகரித்து மூவரடங்கிய நீதியரசர்கள் குழுவின் பெரும்பான்மையான நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பு முற்றிலும் சட்டத்திற்கு முரணானது என சுட்டிக்காட்டிய மனுதாரர், இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க இராஜாங்க அமைச்சர் டயானா கமகே அதற்கு தகுதியற்றவர் என அறிவிக்குமாறு உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# சீரற்ற காலநிலையினால் 2,208 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஜன. 09

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 650 குடும்பங்களை சேர்ந்த 2,208 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா மற்றும் மத்திய மாகாணங்கள் சீரற்ற வானிலையால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஊவா மாகாணத்தில் 575 குடும்பங்களைச் சேர்ந்த 1,918 பேரும் மத்திய மாகாணத்தில் 75 குடும்பங்களை சேர்ந்த 290 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதியிடம் மனுவைக்கூட கையளிக்க முடியாத நிலைமை!

## வடக்கு கடற்றொழிலாளர் இணையம் சாடல்

மன்னார், ஜன. 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான விஜயத்தின் போது மன்னார் மாவட்ட மீனவர்கள் உள்ளடங்கலாக மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்னைகள் குறித்து மகஜர் ஒன்றை கையளிக்க முயற்சித்த போதும் அதனைக் கையளிக்க முடியாத நிலை ஏற்பட்டதாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான விஜயத்தின் போது மண்ணார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக கலந்துரையாட எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பல்வேறு பிரச்னைகளுக்கு மத்தியில் கலந்து கொண்டிருந்தோம்.கடல் தொழில் சார்பாக கலந்துரையாட நீண்ட நேரம் ஒதுக்கி தரப்படும் என தெரிவிக்கப்பட்டது.எனினும் கலந்துரையாடல் தொடர்பான நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்டிருந்தது.

இதனால் எமது கோரிக்கைகளை முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஜனாதிபதியிடம் முன்வைக்க முனைந்த கோரிக்கைகளை ஊடகங்கள் ஊடாக வெளிக்கொண்டு வருகிறோம்.

1. இந்திய இழுவைப் படகுகள் தொடர்பாக

ஆயிரக் கணக்கான இந்திய இழுவைப்படகுகள் எமது வாழ்வாதாரம் அடியோடு அற்றுப் போகும் படியாக எமது கரைக்கு மிக அருகாமையில் (சுமார் 500 மீட்டர் தொலைவில்) வந்து மீன்பிடி நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றன.

இதனால் எமது தொழில் வெகுவாகப் பாதிக்கப்படுவதோடு கடல் வளம் அறவே அற்றுப் போய் விடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே 2016 ஆம் ஆண்டு டில்லியில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சு மட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானத்தை செயல்படுத்துவதே இதற்கு தீர்வாக அமையும்.

2.இல்மனைட் மண் அகழ்வு

மன்னார் தீவில் இல்மனைட் மண் அகழ்வானது மக்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தெரியாமல் இடம்பெறுவது பாரதூரமான தொன்றாகும். குறித்த அத்திட்டம் முன்னெடுக்கப்படுமாயின் மன்னார் தீவில் வாழுகின்ற மீனவர்கள் தங்கள் வாழிடங்களை இழந்து இப்பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றும் என்பது உறுதியாகும்.

3.சட்டவிரோத மீன்பிடி முறைகளை முற்றாக நிறுத்துவதற்கு அதிகாரிகளை பணித்தல்

மாவட்டத்தில் இச்சட்டவிரோத மீன்பிடியானது இந்திய மீனவர்களின் வருகையை காரணம் காட்டி எமது மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே அதனை முற்றாக நிறுத்துவதற்கு அதிகாரிகளுக்கு பணிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

4.காற்றாலை மின் உற்பத்தித் திட்டம்

காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்திற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். இருப்பினும் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிற கடற்கரைப் பகுதிகளுக்கு மிக அண்மையில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை கோபுரங்களினால் மீன்பிடி வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது.

காற்றாடியானது மீன்பரம்பல் மீது ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக எவ்விதமான விஞ்ஞான ஆதாரங்களும் இதுவரையில் வெளியிடப்படவில்லையாயினும் காற்றாலைகள் அமைக்கப்பட்டதன் பின்னர் மீன்பிடி வெகுவாக நலிவடைந்துள்ளதாக மீனவர்கள் தங்கள் அனுபவரீயில் கூறி நிற்கின்றனர்.

இது தொடர்பாக விரிவுரையாளர்கள் குழாமொன்று மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டு, கடல் நீர் ஓடைகள் (கண்டல் தாவரங்கள்) சிதைக்கப்பட்டதும் கடற்கரையோரமாக பாதை அமைக்கப்பட்டதும் மீன்களின் பெருக்கத்தினை பாதித்துள்ளதாக குறிப்பிட்டிருந்தது.

அத்துடன் அதை விட புதிய 100 காற்றாலை கோபுரங்கள் அமைக்கப்படுவதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் வாழ்விடங்களும் சிதைக்கப்படும் அவல நிலை தோன்றியுள்ளது. எனவே தீவுப் பகுதியை தவிர்த்து இத்திட்டத்தை செயல்படுத்துமாறு மீனவ சமூகம் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

5.இழுந்த மீன்பிடி உபகரணங்களுக்கான நஷ்டஈடு

எமது மாவட்டத்தில் மீனவர்கள் இயற்கை சீற்றங்களினால், இந்திய இழுவைப் படகுகளினாலும் தமது மீன்பிடி உபகரணங்களை இழந்து விடுகின்ற பல சந்தர்ப்பங்கள் தொடர்ந்து ஏற்படுவது வாடிக்கையான தொன்றாகும்.

இருப்பினும் மேற்படி பாதிப்புக்குள்ளாகும் ஏழை மீனவர்களுக்கு எவ்வித நஷ்டஈடுகள் வழங்கப்படுவதில்லை என்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. எனவே இம் மீனவர்களின் வாழ்வாதாரம் முடங்கிப் போய் விடாது அவர்களுக்கு இழப்பீடானது உரிய காலத்தில் வழங்கப்படுதல் நன்மை பயக்கும்.

6. இறால், மற்றும் அட்டைப் பண்ணைகளால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் தீங்கு

எமது மாவட்டம்தோறும் ஆங்காங்கே பரவலாக அட்டைப் பண்ணைகளும் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருதல் தற்போது வெகுவாக அதிகரித்துள்ளது.

அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவு நீரால் சுற்றுச் சூழல் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. அந்நீரை அருந்துகின்ற கால்நடைகளும் இறந்து வருகின்றன. மேலும் அந் நீர் கலக்கின்ற இடங்களில் மீன்கள் தொகையாக செத்து மடிவது கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே தற்போது எமது மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்னைகளை தங்கள் மேலான சமூகத்திற்குத் தெரிவித்து நிற்கின்றோம். தாங்கள் அது விடயங்களைக் கண்ணுற்று எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கான உரிய தீர்வுகளை பெற்றுத்தர வேண்டும் -என்றார். (அ)

# தலைவரானால் தடம் மாறுவேன் என்ற சந்தேகம் வேண்டாம்!

## ஊடக சந்திப்பில் சிறிதரன் எம்பி.

காரைதீவு, ஜன. 09

**“தேர்தலுக்காக வார்த்தைகளை தவறாக பயன்படுத்த மாட்டேன். தலைவராக தெரிவானால் தடம் மாறுவேன் என்று சந்தேகம் வேண்டாம். அதற்காக தேங்காய் உடைக்கவும் கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்யவும் தேவையில்லை.”**



-இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு போட்டியிடும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அம்பாறை மாவட்ட ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

கூடவே அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் முன்னாள் காரைதீவு தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் தலைவனை மக்கள் தொண்டர்கள் தெரிகின்ற சந்தர்ப்பம் வந்திருக்கிறது.வேறெந்த கட்சியிலும் இல்லாத ஜனநாயக அணுகுமுறை இது. தேர்தல் என்றால் வெற்றி தோல்வி சகஜம். பரீட்சை போல. அதில் சில நெருடல்கள் இருக்கத் தான் செய்யும். ஆனால் அது கால ஓட்டத்தில் மாறி போகும் .

எமது நோக்கம் எல்லாம் தமிழ் தேசியத்தை நோக்கியதாகவே இருக்கும். மக்களோடு இணைந்து பயணிக்க வேண்டியது எனது கடமை. அதனை நான் மக்களோடு மக்களாக இணைந்து முன்னெடுப்பேன் . என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். இன்று அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்து மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கிய பொதுச் சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடினேன். ஆரோக்கியமான கருத்துக்களை மனம் விட்டு பேசினார்கள். நான் தலைவரானால் எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற துல்லியமான கருத்து ஏற்பட்டிருக்கின்றது.

29 கிராம சேவை பிரிவுகளை கொண்ட தமிழர் பிரதேசமாக கல்முனை தமிழ் பிரதேச செயலகம் உள்ளது.

ஏலவே இது வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும் சகோதர இன சில அரசியலாளர்கள் இதனை தடுப்பது பகிரங்கமாகவே தெரிகிறது.

நான் தலைவரானாலோ இல்லையோ எமது கட்சி இந்த பிரதேசம் செயலகம் தொடர்பில் தனித்துவமான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கும்.

இதற்காக அன்று கோடீஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினர் இன்று கலையரசன் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாம் இந்த விடயத்தில் கூடுதல் அக்கறை செலுத்தி இருந்தார்கள். இப்போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முயற்சி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்படுமா? என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

எது எப்படியோ அரசாங்கம் இந்த செயலகத்தை மக்களிடம் கையளித்தேயாக வேண்டும். இதுவே எமது கட்சியின் நிலைப்பாடு .எமது கட்சியின் நோக்கமே இனவிடுதலைக்காக இலக்காகும். அதனை உடைப்பதற்கு மாறி மாறி வரும் அரசாங்கங்கள் போதை வஸ்து பாவனை நில ஆக்கிரமிப்பு புத்தர் சிலை விவகாரம் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள். அதற்கு எமது மக்கள் பலியாக கூடாது. நாங்கள் மக்களோடு இணைந்து பயணிக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

வெற்றியௌ தோல்வியோ நாங்கள் கட்சிக்காக இணைந்து பயணிப்போம் .கட்சியை சீர்குலைக்கும் எண்ணம் கடுகளவும் இல்லை. தேசிய இலக்கை நோக்கி புலம்பெயர் எமது உறவுகளுடன் இணைந்து எமது மக்களின் எதிர்காலத்தை நோக்கிய பயணத்திற்கு நாங்கள் முனைப்பாக செயல்படுவோம்- என்றார். (அ)

# கிழக்கில் சிறிதரன் எம்பி சூறாவளி சுற்றுப்பயணம்!





காரைதீவு, ஜன. 09

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் வேட்பாளரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் கடந்த இரு தினங்களாக கிழக்கு மாகாணத்திற்கு சூறாவளிச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார் .

அதன்போது திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை போன்ற பிரதேசங்களுக்கு விஜயம் செய்திருந்தார்.

அம்பாறை மாவட்டத்தில் முதல் கூட்டம் கல்முனை பிராந்திய தமிழரசுக் கட்சி பொதுச் சபை உறுப்பினர்களுக்கான கூட்டமாக பாண்டிருப்பு அண்ணா மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அங்கு பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் பிரதான உரையாற்றினார்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் முதலில் உரையாற்றினார்.

பின்னர் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பா.அரியநேத்திரன் ஜி. சிறிநேசன் சி. லோகேஸ்வரன் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மா. நடராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

அங்கே தலைமை வேட்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தான் தலைவர் தெரிவு போட்டியிடுவதன் நோக்கம் அதற்கான பின்புலங்கள் கட்சியின் செயற்பாடு தொடர்பாக உரையாடினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் உரையாற்றினார்கள்.

பொதுச் சபை உறுப்பினர்களும் தங்களது சந்தேகங்களை கேட்டு தீர்த்துக் கொண்டார்கள். கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் பிரதானமாக கலந்துரையாடப்பட்டது.

அதனை அடுத்த கூட்டம் அக்கரைப்பற்றிலே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் அவரது இல்லத்தில் அன்று மாலை நடைபெற்றது. (அ)

# கோட்டைக்கல்லாறு பாலத்தில் விபத்து



மட்டக்களப்பு, ஜன. 10

மட்டக்களப்பு இருந்து கல்முனை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும், தம்புள்ள நோக்கி பயணித்த கனரக வாகனமும் கோட்டைக் கல்லாறு பாலத்தில் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் பலர் காயமடைந்துள்ளனர்.

பலத்த காயங்களுக்குள்ளான கனரக வாகன சாரதி களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# குச்சவெளியில் மாணவர் கௌரவிப்பு விழா

திருமலை, ஜன. 09

திருகோணமலை குச்சவெளி அஹதியா பாடசாலையின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி மாணவர் கௌரவிப்பும் பட்டமளிப்பு விழாவும் குச்சவெளி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

அஹதியா பாடசாலையின் அதிபர் முஹம்மது சிபுனிஸ் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் டீன் பவுண்டேசனின் தலைவர் முஹம்மது ஆதில், சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆர். அரியரத்தினம்,



பௌத்த சமய , இந்து சமய, இஸ்லாம் சமயப்பெரியார்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரச்சியில் சித்தி அடைந்த மாணவர்கள், தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள், அஹதியா பாடசாலையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கும் சின்னங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (அ)

# அம்பாறை ஆறுகளை அண்டிய பிரதேச மக்கள் விஷ ஜந்துக்களின் தொல்லைக்கு முகம் கொடுப்பு

அம்பாறை, ஜன. 09

அம்பாறை மாவட்டத்தின் ஆறு,குளம் மற்றும் வடிகான்களை அண்டியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் இரவு வேளைகளில் விஷ ஜந்துக்களின் தொல்லைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியான மழையாலும் அதனால் ஏற்பட்டுள்ள வெள்ள நிலமையாலும் வேறு இடங்களில் இருந்து நீரோட்டத்தினால் வந்திருக்கலாம் என்று நம்பப்படும் பாம்பு, முதலை, கபரகொய்யான் மற்றும் ஆமைகள் போன்றவற்றின் நடமாட்டம் இரவு வேளைகளில் அதிகரித்திருப்பதனால் நிம்மதியாக வீடுகளில் தங்கியிருக்க முடியாத நிலமையொன்று தோன்றியுள்ளது.

இரவு வேளைகளில் வீட்டுக்குள் புகும் கொடிய நாகம், புடையன், காட்டு விரியன், வளலை போன்ற பாம்புகளின் கடிக்கு இலக்காகி பலர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றும் வருகின்றனர். (அ)

# இந்தியாவுடனான முறுகலுக்கு மத்தியில் மாலைதீவு ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம்

## உற்றுநோக்கும் இந்திய உளவுத்துறை

மலே, ஜன. 09

**இந்தியாவுடனான இராஜதந்திர மோதல்களுக்கு மத்தியில் மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்ஸு சீனாவுக்கு அரசுமுறை பயணமொன்றை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மேற்கொண்டுள்ளார்.**

**மொஹமட் முய்ஸுஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் சீனாவுக்கு மேற்கொள்ளும் முதல் உத்தியோகபூர்வ விஜயமாக இது உள்ளது.**



சீன அதிபர் சி ஜின் பிங்கின் அழைப்பின் பேரில் இந்த விஜயத்தை ஜனாதிபதி மொஹமட் முய்ஸுமேற்கொண்டுள்ளதுடன், மாலைதீவின் முதல் பெண்மணி சஜிதா முகமதும் இந்த விஜயத்தில் ஒரு பங்காளராக உள்ளார்.

மாலைத்தீவின் நெருங்கிய அண்டை நாடான மற்றும் சுற்றுலாவின் குறிப்பிடத்தக்க முலாதாரமாக உள்ள இந்தியாவுடனான இராஜதந்திர முறுகல்களின் பின்னணியில் ஜனாதிபதி முய்ஸுவின் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

'அவுட் இந்தியா' பிரசாரத்தின் மூலம் மாலைதீவு ஜனாதிபதித் தேர்தலில் பிரபல்யமடைந்து அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி முய்ஸு, சீன சார்ப்பு கொள்கையுள்ளவர் என பரவலான குற்றச்சாட்டுகளும் முன் வைக்கப்பட்டிருந்தன.

இவர் ஜனாதிபதியான மறுநாளே மாலைதீவில் இருந்து இந்திய படைகள் அகற்றப்படும் என சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். இதனால் தேர்தலின் பின்னர் இருநாட்டு உறவுகளில் பாரிய விரிசல் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு தசாப்தமாக மாலைதீவில் தமது செல்வாக்கை நிலைநிறுத்த இந்தியாவும் சீனாவும் கடுமையாக போட்டியிடுகின்றன. என்றாலும், மாலைத்தீவின் தற்போதைய ஜனாதிபதி அங்கு சீனாவின் செல்வாக்கையே விரும்புகிறார்.

மாலைதீவு ஜனாதிபதியின் சீன விஜயத்தை இந்தியா இராஜதந்திர மட்டத்தில் தமது உளவுத்துறை மட்டத்திலும் உற்றுநோக்கி வருகிறது. இதே வேளை, இந்திய பிரதமர் நரேந்திர மோடி லட்சத்தீவில் கடல் விளையாட்டுகளில் ஈடுபட்டதை மாலைத்தீவின் சில அமைச்சர்களும் மற்றும் அரசியல்வாதிகளும் விமர்சித்திருந்தனர்.

இதற்கு இந்தியா கடுமையான கவலையை மாலைதீவுக்கு வெளிப்படுத்தியிருந்தது. இதனால் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்ட மூன்று அமைச்சர்களுக்கு இடைக்கால தடையையும் மாலைதீவு அரசாங்கம் வெளியிட்டிருந்தது.



# அலாஸ்கா எயார்லைன்ஸ் தரையிறங்கத் தடை 200இற்கு மேற்பட்ட விமானப் பயணங்கள் ரத்து

நியூயோர்க், ஜன. 09

171 போயிங் 737 மக்ஸ் 9 ரக விமானங்களை தரையிறக்க அமெரிக்க பெடரல் ஏவியேஷன் நிர்வாகம் உத்தரவிட்டதை அடுத்து, அலாஸ்கா ஏர்லைன்ஸ் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை 170 விமானப் பயணங்களையும், நேற்று திங்களன்று கூடுதலாக 60 விமான பயணங்களையும் ரத்து செய்துள்ளது.


இன்னும் சில நாட்களுக்கு இந்த விமானங்களின் ரத்து தொடரும் என்பதால், இதனால் கிட்டத்தட்ட 25,000 பயணிகள் பாதிப்படை உள்ளனர்.

கடந்த சனிக்கிழமை, 174 பயணிகளை ஏற்றி சென்ற அலாஸ்கா ஏர்லைன்ஸ் விமானத்தின் அவசர வெளியேறும் கதவு நடுவானில்கழண்டு வெளியே பறந்தது. அதனையடுத்து, அந்த விமானம் அமெரிக்காவில் உள்ள போர்ட்லேண்டில் அவசரமாக தரையிறக்கப்பட்டது,

அதிர்ஷ்டவசமாக, அந்த விமானத்தில் இருந்த பயணிகளும் பணியாளர்களும் உயிர் தப்பினர். இந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பான சூழலை உருவாக்கியது.

விபத்துக்குள்ளான அந்த விமானம் ஒரு புத்தம் புதிய விமானமாகும். இரண்டு மாதங்களுக்கு முன்பு தான் அதற்கு சான்றிதழும் அளிக்கப்பட்டது. எனவே, இந்த பிரச்சனையை கருத்தில் கொண்டு, அதே வகையை சேர்ந்த அனைத்து போயிங் ஜெட் விமானங்களையும் தற்காலிகமாக முடக்க அமெரிக்க ஃபெடரல் ஏவியேஷன் நிர்வாகம் உத்தரவிட்டது.

அந்த ஜெட் விமானங்களில் உள்ள பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்த பின்னர் தான் அவை மீண்டும் இயக்கப்படும் என்று அமெரிக்க ஃபெடரல் ஏவியேஷன் நிர்வாகம் தெரிவித்திருந்தது. இந்த சம்பவம் போயிங்கின் 737 மக்ஸ் 9 விமானங்களின் பாதுகாப்பு குறித்த பரந்த கவலைகளை எழுப்பியுள்ளது. (அ)



# 5ஆவது முறையாக மீண்டும் பிரதமரானார் ஷேக் ஹசீனா

## வன்முறைக்கு மத்தியில் வெற்றிகரமாக நடைபெற்ற பொதுத்தேர்தல்

டாக்கா, ஜன. 09

பங்களாதேஷ் பொதுதேர்தலில் தொடர்ந்து 5ஆவது முறையாக ஷேக் ஹசீனா வெற்றி பெற்று மீண்டும் பிரதமராகியுள்ளார்.

முக்கிய எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சி நாடுதழுவிய போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது.

இந்த தேர்தலை புறக்கணிப்பதாக அக்கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான கலீதா ஜியா அறிவித்தார்.

மேலும், பொதுத்தேர்தல் நடைபெறும் சூழலில் தேர்தல் ஆணையத்தின் தேர்தல் செயலி செயலிழந்துள்ளதாக தகவல் வெளியானது.

இதற்கிடையே, எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு மற்றும் தேர்தல் செயலி செயலிழப்பு ஆகியவற்றுக்கு இடையே பலத்த பாதுகாப்புடன் தேர்தல் நடைபெற்றது.

பல வன்முறை சம்பவங்களும் நேற்றைய தினம் பதிவாகியிருந்தன.

இந்நிலையில், 5ஆவது முறையாக ஷேக் ஹசீனா வெற்றி பெற்று மீண்டும் பிரதமராகியுள்ளார். (அ)

# சைபர் தாக்குதலால் மாலைதீவின் அரசு இணையதளங்கள் முடங்கின!

## மோடியை விமர்சித்ததன் எதிரொலியா?

மலே, ஜன. 09

இந்திய பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் லட்சத்தீவுக்கு பயணம் மேற்கொண்டார். அந்த தீவின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் தீவின் அழகான, தூய்மையான கடற்கரை பகுதிகளின் புகைப்படங்கள், வீடியோவை அவர் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டார்.

இதனால் சுற்றுலா துறையை நம்பியிருக்கும் மாலைதீவு அதிர்ச்சி அடைந்தது. பிரதமர் மோடி, இந்தியாவுக்கு எதிராக மாலைதீவு அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் அவதூறாக விமர்சித்தனர். இந்த சூழலில் மாலைத்தீவின் அரசு இணையதளங்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.



இதனால் மாலைதீவு வெளியுறவுத்துறை, சுற்றுலா துறை இணையதளங்கள் முழுமையாக முடங்கின. மாலைதீவு அரசின் பெரும்பாலான இணையதளங்கள் ஹேக் செய்யப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதுதொடர்பாக மாலைதீவு அரசு தரப்பில் அதிகாரபூர்வமாக எவ்வித தகவலும் வெளியிடப்படவில்லை.

பிரதமர் மோடியை மாலைதீவு அமைச்சர்கள் விமர்சித்தமைக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலேயே இந்திய பைசர் தேர்ச்சியாளர்களால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்திய பிரதமர் மோடியை "கோமாளி", "பயங்கரவாதி" மற்றும் "இஸ்ரேலின் கைப்பாவை" என மாலைத்தீவின் அமைச்சர்கள் விமர்சித்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# குண்டு வெடிப்பு சம்பவத்தில் 5 பேர் பலி! 20 பேர் காயம்!!

இஸ்லாமாபாத், ஜன. 09

பாகிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன், 20 பேர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் போலியோ நோய் தடுப்புக்காக தடுப்பூசி செலுத்தும் முகாம் ஒன்று நடைபெற இருந்தது.

இதற்கு பாதுகாப்பு வழங்க காவல்துறையினர் நியமிக்கப்பட்டனர்.

இப்பணிக்காக சுமார் 25 காவல்துறையினரை ஏற்றி கொண்டு சென்ற காவல்துறைக்கு சொந்தமான பாரவூர்தி ஒன்றிலேயே குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த காவல்துறையினர் மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# பிற நாடுகளின் கொந்தராத்துகளுக்காக பயங்கரவாத சட்டம் வந்தால் ஆதரவில்லை

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத்

கொழும்பு, ஜன. 09

**திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், வேறு நாடுகளின் கொந்தராத்துக்களை எமது நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான சட்டமாக இருந்தால் அதனை ஆதரிக்க முடியாது என்று மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் குருநாகல் மாவட்ட மத்திய குழுக் கூட்டம் நேற்று முன தினம் ரோமன் பரடைஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், "எதிர்காலத்தில், நாட்டுக்குத் தேவையான நல்லதொரு தலைமைத்துவத்தையும் சிறந்த ஆட்சி, அதிகாரத்தையும் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, குருநாகல் மாவட்ட கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நாம் கலந்துரையாடி, அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டோம்.

தற்போது நாட்டில் வாழ முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. பொருட்களுடைய விலை கட்டுக்கடங்காமல் அதிகரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மிகவும் பாரதூரமான கஷ்டங்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வற் வரியினால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அரசாங்கம் இந்த விடயத்தில் கவனஞ்செலுத்த வேண்டும். அரிசி, சீனி போன்ற அத்தியாவசிய பொருட்களைக்கூட வாங்க முடியாமல் மக்கள் திண்டாடுகின்றார்கள். எனவே, இவற்றுக்கான நிவாரணத்தை அரசாங்கம் உடனடியாக மக்களுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன், திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் பயங்கரவாத தடைச்சட்டம் சுயநலத்திற்காகவும் தங்களுடைய கட்சி அரசியலை மேற்கொள்வதற்காகவுமே பயன்படுத்தப்பட்டமையை நாம் அறிவோம். எனவே, நாட்டுக்கு நன்மைபயக்கக் கூடியதாக, அரசியல் இலாபத்துக்காக எந்தவொரு இனத்தையும் மதத்தையும் குறிவைக்காமல் செயல்படக்கூடிய ஒரு சட்டமாக அது அமைந்தால் ஆதரவு வழங்குவோம். அவ்வாறின்றி, சுயநலத்திற்காகவோ அல்லது வேறு நாடுகளின் கொந்தராத்துக்களை எமது நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான திருத்தப்பட்ட சட்டமாக இருந்தால் அதனை ஆதரிக்க முடியாது" என்று தெரிவித்தார். (அ)

# இன்று கூடுகிறது பாராளுமன்றம்

கொழும்பு, ஜன. 09

ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் தொடர்பான சட்டமூலம் இன்று பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

பாராளுமன்றம் இன்று முதல் 12ஆம் திகதி வரை கூடவிருப்பதாக பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 09.30 முதல் மு.ப 10.30 வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 05.00 மணிவரை தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), தேசிய நீரளவை சட்டமூலம் (இரண்டாவது மதிப்பீடு), கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தின் கீழ் 2355/30ஆம் இலக்க வர்த்தானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் 2334/55ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர், இலங்கை பட்டய கப்பல் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், இலங்கை சித்த உளவியல் சார் உயர் கற்கைநெறிகள் திறந்த நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன இரண்டாவது மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கப் படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பி.ப 05.00 மணி முதல் பி.ப 05.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை (ஆளும் கட்சி) மீதான விவாதம் நடைபெறவுள்ளது. விவாதம் நடத்தப்படவுள்ளது. (அ)

# தற்போதுள்ள கட்சிகளுக்கு தொலைநோக்கு கிடையாது

## தம்மரத்ன தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 09

நாட்டில் தற்போதுள்ள அரசியல் கட்சிகளுக்கு தொலைநோக்கு பார்வை இல்லை என்றும் எதிர்காலத்தில் ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே அரசியலமைப்பின் கீழ் நாட்டை நடத்த தயாராக உள்ளதாகவும் தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலையில் இருந்து நாட்டை கட்டியெழுப்பும் பாதையை மீள ஆரம்பிப்போம் என்ற நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர், நாட்டின் நலன் கருதி ஜனாதிபதித் தேர்தலுக்கும், பாராளுமன்றத் தேர்தலுக்கும் தயாராகி வருவதாக குறிப்பிட்டார்.

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு துறைசார் வல்லுநர்களை இணைத்து ஒரே அரசியல் கட்சியில் மற்றும் ஒரு சின்னத்தில் போட்டியிட வைக்கும் முனைப்பில் தாம் செயற்பட்டு வருவதாகவும் தம்மரத்ன தேரர் தெரிவித்தார்.

மேலும் நாட்டின் சொத்துக்களை திருடிய அனைத்து அரசியல்வாதிகளும் சிறையில் அடைக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் எவ்வாறு சொத்துக்களை திரட்டினார்கள் என்பதை தாம் பகிரங்கப்படுத்துவோம் என்றும் தம்மரத்ன தேரர் கூறினார். (அ)

# 8 லட்சம் மின் இணைப்பு துண்டிப்பு!

கொழும்பு, ஜன. 09

மின்கட்டணம் செலுத்த முடியாமல் கடந்த 03 காலாண்டுகளில் 08 இலட்சம் பேரின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார நெருக்கடியை தணிக்கும் துறைசார் கண்காணிப்புக் குழுவில் தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல்கள் கவனத்தில் கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த மின்வெட்டுகளில் பெரும்பாலானவை மிகவும் ஏழை மக்களின் இணைப்புகள் என்பது தெரியவந்துள்ளது.

மின்வெட்டு காரணமாக குழந்தைகளின் ஊட்டச்சத்து முதல் மாணவர்களின் கற்றல் நடவடிக்கை உள்ளிட்ட பல வற்றை அவர்கள் இழந்துள்ளதாகவும், இதன்போது தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலைமை காரணமாக எதிர்காலத்தில் அவர்களுக்கு ஆபத்தான சமூக மட்டத்தை உருவாக்குவதற்கான அடிப்படையை வழங்கும் விடயமாக இது அமையலாம் என குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைப் போக்குவதற்கும், நிலையான பொருளாதார வளர்ச்சிக்கான வசதிகளை வழங்குவதற்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சார சபை ஆகியவற்றின் பொறுப்பைக் கருத்தில் கொண்டு, சர்வதேச நாணய நிதியம் அவதானித்துள்ள நிர்ணய செலவுக்கு ஏற்ற விலையாக கட்டணத்தை மாற்ற வேண்டும் என்று குழு பரிந்துரைத்துள்ளது.

இதன்படி, 05 முன்மொழிவுகளை உடனடியாக அமுல்படுத்துமாறு துறைசார் கண்காணிப்புக் குழு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு பரிந்துரைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் 03 மாத காலத்திற்கு மின் கட்டணத்தை பிரிக்கும் வகையில் மின் கட்டணத்தை குறைக்க மின்சார சபைக்கு உத்தரவிடுவதும் அதில் உள்ளடங்கியுள்ளது.

தீவிர வறுமையால் பாதிக்கப்பட்ட குடும்ப அலகுகளுக்கு சிறப்பு நியாய விலை முறையை அறிமுகப்படுத்துவது மற்றும் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் தொழில் முறையைப் பாதுகாக்கும் விலைக் கொள்கையை விரைவாக அறிமுகப்படுத்துவது இரண்டாவது மற்றும் மூன்றாவது முன்மொழிவுகள் ஆகும்.

இந்த ஆண்டின் எதிர்காலத்தில் விலை நிர்ணயம் பற்றிய முழு வெளிப்படைத்தன்மை மதிப்பாய்வைத் தொடங்குவது மற்றொரு பரிந்துரை ஆகும்.

# சுற்றுலாத் துறையில் இலங்கை முன்னிலை

கொழும்பு, ஜன. 09

2024 ஆம் ஆண்டில் தனிநபர் வருகைக்காக உலகின் மிகவும் பிரபலமான சுற்றுலாத் தலங்களில் இலங்கை நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

"பிளாஷ் பக்" பயண இணையதளத்தின் மதிப்பீட்டின்படி "போப்ஸ்" வணிக இதழ் இதை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கைக்கு மேல் ஜப்பான், அர்ஜென்டினா மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் உள்ளன.

பல பொருளாதார நெருக்கடிக்கு பிறகுஇ இலங்கை தற்போது சுற்றுலாத் துறையில் முன்னேற்கி வந்து கொண்டிருக்கிறது என்று அவடியா இணையத்தளத்தின் இலங்கை பற்றிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி 2023ஆம் ஆண்டில் 1,487,303 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

கடந்த ஆண்டு இந்த நாட்டில் சுற்றுலாத்துறை மூலம் கிடைத்த வருமானம் 2,068 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிகரித்தது முருங்கைக்காய் விலை

யாழ்ப்பாணம், ஜன. 09

சந்தையில் மரக்கறிகளின் விலை உயர்வினால் யாழ்ப்பாண வாரச்சந்தையில் ஒரு கிலோ முருங்கைக்காயின் சில்லறை விலை 3000 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இந்த நாட்களில் முருங்கை அறுவடை கிடைக்காததாலும், ஏனைய வகை மரக்கறிகளின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளதாலும், முருங்கையின் விலையும் அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாண மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ முருங்கைக்காயின் மொத்த விலை 2500 ரூபாவாக காணப்பட்டதுடன், யாழ்ப்பாணத்திலிருந்து பல மாகாணங்களுக்குச் செல்லும் பேருந்துகளிலும் முருங்கைக்காய் மூடைகள் ஏற்றப்பட்டமையை காணமுடிந்தது. (அ)

# விசேட சோதனையில் 995 பேர் கைது!

கொழும்பு, ஜன. 09

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் முன்னெடுக்கப்பட்ட பொலிஸாரின் விசேட சோதனை நடவடிக்கைகளில், போதைப்பொருள் உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 995 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 39 சந்தேக நபர்கள் விளக்கமறியல் உத்தரவின்படி, விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 435 கிராம் ஹெரோயின், 261 கிராம் ஐஸ், 2 கிலோ 946 கிராம் கஞ்சா, 58 ஆயிரத்து 234 கஞ்சா செடிகள், 12 கஞ்சா சுரட்டு, 3 கிலோ 903 கிராம் மாவா, 448 கிராம் தூள், 118 கிராம் ஏஷ், மற்றும் ஆயிரத்து 403 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை பொலிஸாரின் விசேட சோதனை நடவடிக்கைகளில், போதைப்பொருள் வியாபாரிகளின் ஆடம்பர வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## பெப்.1 முதல்...

சுமார் 5 இலட்சம் பேரையும் வரிவலைக்குள் கொண்டு வர வேண்டும். வரி செலுத்துபவர் ஒரு நாட்டில் பலம் வாய்ந்த குடிமகன். இது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த நாட்டு மக்களும் இத்தகைய மனப்பான்மையை கொண்டுவருவது நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

2019ஆம் ஆண்டின் இறுதியில் 17 இலட்சத்து 5 ஆயிரத்து 233 ஆக இருந்த வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 4 இலட்சத்து 37 ஆயிரத்து 547 ஆகக் குறைந்தது. எமது அரசாங்கத்தின் புதிய கொள்கைகளால், 2023 டிசம்பர் 31இற்குள் வரிக் கோப்புகளின் எண்ணிக்கையை 10 இலட்சத்து 2 ஆயிரத்து 29 ஆக உயர்த்த முடிந்தது. நாம் மேலும் அந்தத் தொகையை அதிகரிக்க வேண்டும்.

அத்துடன், கடந்த வருட இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8வீதமாக இருந்த அரச வருமானத்தை 10 வீதமாக அதிகரிக்க முடிந்தது. 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் அதை 12 வீ தமாக உயர்த்த இலக்கு வைத்துள் ளோம். ஓரளவு நிலையான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக மாறுவதற்கு 2025 ஆம் ஆண்டளவில் 15வீத மாக அதிகரிக்க எதிர்பார்க்கிறோம்.

மேலும், வற் வரிக்கு சில திருத்தங்கள் செய்யப்படுகின்றன. இதுவரை 15 வீதமாக இருந்த வற் வரி 18வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 8 கோடி ரூபாயாக இருந்த வற் வரி எல்லை 6 கோடி ரூபாயாக அமையும். 2001 இல் வற் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகள் வற் வரிக்கு உட்பட்டது. அதில் குறைந்த எண்ணிக்கையிலான பொருட்களுக்கு வரி திருத்தச் சட் டத்தின் ஊடாக விலக்களிக்கப்பட்டன. விலக்கு அளிக்கப்பட்ட 138 பொருட்கள் மற்றும் சேவைகளில், 97 வகையானவை இந்தத் திருத்தத்தில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

வற் வரி திருத்தத்தின் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரச வருமானம் 2.07 வீதத்தால் உயரும். இது 64 ஆயிரத்து 500 கோடி ரூபாய். வரி விகிதங்களின் அதிகரிப்புடன் பணவீக்கம் 2.5வீதமாக அதிகரிக்கும் என மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுப் பிரிவு பகுப்பாய்வு செய்துள்ளது. மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதன் மூலம் பணவீக்கத்தை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் மீண்டும் 5 வீதத்துக்கு கொண்டு வர முடியும் என மத்திய வங்கியும் நிதி அமைச்சும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இன்று நேரடி வரிகள் 30 வீதமாகவும் மறைமுக வரிகள் 70 வீதமாகவும் உள்ளன. இந்த வரி விகிதத்தை மாற்றி, நேரடி வரி விகிதத்தை 40 வீதத்துக்குக் கொண்டு வருவதே எமது இலக்கு. உலகில் அபிவிருத்தி அடைந்த ஒரு நாட்டின் நிலை அதுவேயாகும். வரி செலுத்தக்கூடிய பலம் வாய்ந்த 10 மில்லியன் மக்கள் உள்ளனர், ஆனால் தற்போது 5 இலட்சம் பேர் மட்டுமே வரி செலுத்துகின்றனர். எனவே, வரி ஏய்ப்பு செய்பவர்களை கண்டறிந்து, அவர்களை வரி வலைக்குள்ளே கொண்டு வர வேண்டும். பின்னர் மறைமுக வரிகளை குறைக்க முடியும்.

பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து வரிக்கோப்பு இலக்கத்தை நடைமுறைப்படுத்தத் தயாராகி வருகிறோம். தற்போது அதனைப் பதிவு செய்வதில் சிக்கல்கள் உள்ளன. மக்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாக உள்ளதால் தான் அந்தப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. எனவே பிரதேச செயலக மட்டத்தில் அந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண ஆலோசித்து வருகிறோம். அதனை ஒன்லைன் முறை மூலம் செயல்படுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் - என்றார். (ஐ)

## புத்தர்...

கரையொதுங்கியது.

இதன் அலங்காரம் அமைப்பு முறை தென்கிழக்காசிய நாடுகளின் கலாசார முறைமையை பிரதிபலிக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-02)

## மின்சாரம்...

வவுனியா, பூந்தோட்டத்தை சேர்ந்த ஜெகதீஸ்வரன் பவித்திரன் (வயது 29) என்ற இளைஞனே உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் நீதிவானின் உத்தரவுக்கு அமைய பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட் டது.

இராமநாதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 86கோடி...

அடியில் பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் 48 கிலோ அபின் போதைப் பொருளும் 28 கிலோ கஞ்சாவும் கைப்பற்றப்பட்டன.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்கவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை இந்தப் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவத்துடன், தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ -02)

## செங்கடலுக்கு...

கப்பல் பயன்படுத்தவுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் இலங்கை கடற்படை தனது கப்பலை அனுப்புகின்றது. ஆனால், இதற்கான திகதியை இன்னமும் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் மேலதிக கப்பல்களை செங்கடல் பகுதிக்கு அனுப்புவோம் எனவும் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

## 3 எம்.பிக்கள்...

நிர்மலநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், தமிழ் மக்கள் கூட்டணியின் வி. மணிவண்ணன், வேலன் சுவாமி ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இதேபோன்று கடந்த ஆண்டு தேசிய தைப்பொங்கல் விழாவுக்காக யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் வேலன் சுவாமிகள் உட்பட சிலர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த இரு வழக்குகளும் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது.

இந்த இரு வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற வேண்டுமென பொலிஸார் தெரிவித்தபோது பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வழக்குகளை கிடப்பில் போட்டு அனைவரையும் விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்டு நீதிமன்றம், பிரதிவாதிகள் அனைவரையும் விடுதலை செய்தது.

இந்த வழக்குகளில் பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசாவுடன் சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஷ் முன்னிலையாகியிருந்தார். (ஐ)

# நாகபட்டினம் - காங்கேசன்துறை இடையே சிவகங்கை கப்பல் சேவையில் ஈடுபடாது!

சென்னை, ஜன. 09

காங்கேசன்துறை - நாகபட் டினம் கப்பல் சேவை எதிர் வரும் பெப்ரவரி முதலாம் திகதி மீள ஆரம்பமாகிறது. இந்தப் கப்பல் சேவையை 'ஷிப்பிங் கோர்ப்ரேஷன் ஒவ் இந்தியா' (Shipping Corporation of India) நிறுவனமே நடத்தவுள்ளது.

இந்தத் தகவலை தமிழ்நாடு கடல்சார் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத் துக்கான கப்பல் சேவைக்கு இலட்சத்தீவில் இயங்கும் பராலி என்ற கப்பலை பயன் படுத்த அந்த நிறுவனம் முயற்சிகளை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், இந்த கப்பல் சேவையில் சிவகங்கை கப்பல் ஈடுபடவில்லை என்றும் உறுதிப்படுத்தப்படவுள்ளது. (ஐ)

### யுக்திய சோதனையில்

# ரூ. 10 கோடி பெறுமதியான சொத்துக்களுக்கு தடை!

கொழும்பு, ஜன. 09

யுக்திய சோதனை நடவடிக்கையின் ஊடாக பிரபல போதைப்பொருள் வியாபாரிகளின் ஆடம்பர வாகனங்கள் மற்றும் பல்வேறு சொத்துகள் சட்ட விரோத சொத்துகள் அல்லது சொத்து விசாரணைப் பிரிவால் தடை செய்யப்பட்டன.

இதன்படி 4. 5 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகள் மற்றும் காணிகள், இதேபோன்று 6. 1 கோடி ரூபாய் பெறுமதியான பல சொகுசு வாகனங்களும் யுக்திய நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டன.

இதன் பிரகாரம் குடு ரொஷான், கவிது மதுரங்க மற்றும் ஹெட்டியாராச்சிகே சிறீயானி ஆகியோருக்கு சொந்தமான பல வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் சட்டவிரோத சொத்துக்கள் அல்லது சொத்துகள் விசாரணை பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# சிறுமி கூட்டு வன்புணர்வு காத்தான்குடியில் மூவர் கைது!

மட்டக்களப்பு, ஜன. 09

15 வயது சிறுமி ஒருவரை கூட்டு வன்புணர்வு செய்தனர் என்ற குற்றச்சாட்டில் 3 பேரை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிமை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் கடந்த சனிக்கிழமை 15 வயது சிறுமியை அதே பகுதியை சேர்ந்த 26 வயது இளைஞர் வீடொன்றுக்கு வரவழைத்துள்ளார். அங்கு அவரின் நண்பர்கள் இருவர் உட்பட 3 பேர் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமி உறவினரிடம் தெரிவித்ததையடுத்து, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து காத்தான்குடி பெரும் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி கஜநாயக்க தலைமையில் விசாரணைகள் நடந்தன.

இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறுமியை வன்புணர்வு மேற்கொண்ட அந்த பகுதியை சேர்ந்த 26 வயதுடைய இருவரும் 32 வயதுடைய ஒருவரும் என 3 பேரை நேற்று கைது செய்தனர்.

இதில் பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்த சம்பவத்தில் கைதானவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## வரியை...

தலைமை பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

கட்சி என்ற வகையில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன எந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்கும் தயாராகவே உள்ளது. அரசமைப்புக்கு அமைய இந்த ஆண்டில் தேர்தல் நடைபெறவேண்டும். கிராமிய மட்டத்தில் கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். அந்த வகையில் தற்போதைய நிலையில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன பலமான கட்சியாகும். புனைகதைகளையே எந்தக் கட்சியாலும் கூற முடியும். கீழ் மட்ட மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றிய கட்சி என்றால் அது சிறீ லங்கா பொதுஜன பெரமுனவே.

வாழ்க்கை செலவை குறைத்துக் கொண்டு தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தோம். அந்த காலப்பகுதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய பின்னணியில் வரியை அதிகரிக்குமாறு மக்கள் கோரினர். ஆனால் தற்போது வரியை அதிகரிக்கும் போது எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகைள முன்னெடுத்து வருகின்றோம் - என்றார். (ஐ)

# அஸ்வெசும கொடுப்பனவுக்கு விசேட பிரிவு

கொழும்பு, ஜன. 09

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் தனியான விசேட பிரிவுகளை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான இரண்டாவது சுற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் விசேட பிரிவொன்றை நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சிறப்பு பிரிவுகளுக்கு கிராம மட்டத்தில் அதிகாரி ஒருவரை நியமிக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அரச...

கொடுப்பனவை இரட்டிப்பாக்கும் ஜனாதிபதியின் முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி 35 ஆயிரம் ரூபாய் முதல் 70 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கப்படும். அத்துடன், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆய்வு கொடுப்பனவில் 25 வீதம் அதிகரிப்பு செய்யப்பட்டு அவர்களின் ஜனவரி சம்பளத்தில் சேர்க்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu

# இணையவழி கடன் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்

## அரசாங்கத்தை வலியுறுத்தும் எதிர்க்கட்சி

கொழும்பு, ஜன. 09

**இணையவழி கடன் வழங்குநர்களினால் நாட்டில் பல்வேறு பாரிய நிதி மோசடிகள் இடம்பெற்று வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

'இணையவழி கடன் மாபியாவுக்கு எதிராக அணிதிரள்வோம்' எனும் அமைப்பின் உறுப்பினர்களை சந்தித்தபோது எதிர்க்கட்சித் தலைவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இணையவழி கடன் வழங்குநர்கள் கடன் பெற்றவர்களிடம் இருந்து நூற்றுக்கு 365 வீதத்திற்கும் அதிகளவான வட்டி வசூலிக்கப்படுவதன் காரணமாக மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டுப்பாடுகள் இன்றி நிதி பரிவர்த்தனை இடம்பெறுவதன் காரணமாக சிலர் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி தற்கொலை செய்துகொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு தொலைபேசி ஊடாக தொடர்பினை ஏற்படுத்தி இந்த விடயம் தொடர்பில் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அமைச்சர் ஹரினின் சகோதரி வீட்டில் திருடர்கள் கைவரிசை

### ஒரு கோடி பெறுமதியான நகைகள் திருட்டு

கொழும்பு, ஜன. 09

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவின் சகோதரியின் வீட்டிற்குள் நுழைந்துள்ள திருடர்கள் ஒரு கோடியே 13 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் வைர நகைகளைத் திருடி சென்றுள்ளனர்.

மர்மநபர்கள் வீட்டிற்குள் புகுந்தமை தொடர்பிலான காட்சிகள் பாதுகாப்பு கேமராவில் பதிவாகியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் ஆண் மற்றும் பெண் ஒருவரை வத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இதற்கு முன்னரும் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் என வத்தளை பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேகநபர்கள் வத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ)

# நுளம்புகளை கட்டுப்படுத்த வொல்பெகியா என்ற பற்றீரியாவை விடுவிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 09

கொழும்பில், டெங்கு நோயாளர்கள் அதிகம் பதிவாகும் பகுதிகளில் நுளம்புகளை கட்டுப்படுத்துவதற்காக வொல்பெகியா என்ற பற்றீரியாவை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அத் தற்போது நாளாந்தம் பதிவாகும் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சிவனொளிபாத மலைக்கான பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நல்லத்தண்ணி நகரில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களை மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகார பிரிவினர் பார்வையிட்டுள்ளனர்.

அத்துடன், டெங்கு நோயை கட்டுப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் குறித்து வர்த்தகர்களுக்கு இதன்போது விழிப்புணர்வு வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவித்தார். (அ)

## ஆபத்தான நிலையில் வட்டுவாகல் பாலம்!



முல்லைத்தீவு, ஜன. 09

முல்லைத்தீவு நகரத்திற்கான ஏ-35 வீதியின் வட்டுவாகல் பாலமானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுவதால் அவ்வீதியின் ஊடாக அச்சத்துடனே போக்குவரத்தை மேற்கொண்டு வருவதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த வீதியின் வட்டுவாகல் பாலத்தில் அடிக்கடி உடைவுகள் மற்றும் வெடிப்பகள் ஏற்படுகின்றன.

உரிய அதிகாரிகளினால் தற்காலிக புனரமைப்பு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரையில் இவ்வீதியை நிரந்தரமாக புனரமைக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஆபத்தான நிலையிலேயே குறித்த பாலத்தினை பிரதேச மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் வீதியின் சில பகுதிகள் பாதுகாப்பு அற்றதாகவும் தாழிறங்கியும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு பலமுறை அறிவித்திருந்தும் இதுரையில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவே உடனடியாக குறித்த பாலத்தினை புனரமைத்து தரும்படி உரிய அதிகாரிகளுக்கு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# ஜெனிற்றாவுக்கு மறியல் நீடிப்பு!

வவுனியா, ஜன. 09

வவுனியாவில் ஜனாதிபதி வருகைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி. ஜெனிற்றாவை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வவுனியாவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை காலை வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாநகர சபை கலாசார மண்டபத்தில் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுடனான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

ஜனாதிபதியின் விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்திற்கு செல்லும் பாதையில் வட கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி. ஜெனிற்றாவுக்கு போராட்டம் எதனையும் முன்னெடுப்பதற்கு நீதவான் நீதிமன்றம் தடைவிதித்திருந்த நிலையிலும் அவரும் போராட்டத்தில் கலந்து கொண்டார்.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்திற்குள் செல்ல முற்பட்ட போராட்டக்காரர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார், ஜனாதிபதியை சந்திப்பதற்கு அனைவருக்கும் அனுமதி வழங்க முடியாது என்றும் ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்கமுடியும் என்றும் தெரிவித்தனர்.

இதனை மறுத்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அனைவரையும் அனுமதிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதனை அடுத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவியான சி. ஜெனிற்றா மற்றும் போராட்டத்தினை காணொளி எடுத்த மீரா ஜஸ்மின் ஆகிய இருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவர் மீதும் நீதிமன்ற கட்டளையை அவமதித்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, அமைதிக்கு பங்கம் விளைவித்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களில் வவுனியா பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியபோது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவியான சி. ஜெனிற்றாவை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் போராட்டத்தை காணொளி எடுத்த பெண்ணுக்கு பிணை வழங்கியும் வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த வழக்கு நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி சி. ஜெனிற்றாவுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# மின் கட்டண உயர்வு, மின் வெட்டுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் மனு!

கொழும்பு, ஜன. 09

மின் கட்டண அதிகரிப்பு மற்றும் மின் வெட்டுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மனு வொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகம், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியோர் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபை வழங்கிய தரவுகளுக்கமைய 52,000 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

அத்துடன் மதிப்பிடப்பட்டதை விட நீர் மின்னுற்பத்தி அதிகரித்தமை மற்றும் மின்சாரத்திற்கான கேள்வி, குறைவடைந்தமையால் 26,000 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை தவிர, மின் அலகொன்றின் விலை 18 வீதத்தினால் அதிகரித்தமையினால் மேலும் 26 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் அதிகரித்துள்ள மின் கட்டணத்தை குறைப்பதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## ரணிலின் இல்லத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் அமைந்துள்ள கொள்ளுப்பிட்டி 5ஆவது வீதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது அந்தப் பகுதியில் வசிப்பவர்களின் தகவல்களை படையினர் சேகரித்து வருகின்றனர் என்றும் தெரிய வருகின்றது.

2022இல் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தின்போது ரணிலின் இல்லத்துக்கு எதிரான போராட்டத்தின் போது, ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீ வைக்கப்பட்டது.

தற்போது, அந்த இல்லத்தின் திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையிலேயே அவரின் இல்லம் அமைந்துள்ள வீதிகளின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்; தொடர் முழுமையாக ஆஸி. வசம்!



சிட்னி, ஜன. 09

பாகிஸ்தானுக்கு எதிரான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரை முழுமையாக 3-0 என கைப்பற்றி கிண்ணத்தை வென்றது.

சிட்னியில் நடைபெற்ற கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 313 ஓட்டங்களும் அவுஸ்திரேலிய அணி 299 ஓட்டங்களும் சேர்த்தன. 14 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணியானது ஜோஷ் ஹசில்வூட் பந்து வீச்சில் ஆட்டம் கண்டது. அப்துல்லா ஷபிக் 0, ஷோன் மசூத் 0, சைம் அயூப் 33, பாபர் அஸம் 23, சவுத் ஷகீல் 2, சஜித் கான் 0, ஆகா சல்மான் 0 ஓட்டங்களில் நடையை கட்டினர்.

3ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் பாகிஸ்தான் அணி 26 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 68 ஓட்டங்கள் எடுத்தது. முகமது ரிஸ்வான் 6, அமீர் ஜமால் ரன் ஏதும் சேர்க்காமல் களத்தில் இருந்தனர். 4ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய பாகிஸ்தான் அணி 43.1 ஓவரில் 115 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. முகமது ரிஸ்வான் 28, அமீர் ஜமால் 18, ஹசன் அலி 5 ஓட்டங்களில் வெளியேறினர். அவுஸ்திரேலிய அணி சார்பில் ஜோஷ் ஹசில்வூட் 4, நதன் லயன் 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

130 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணியானது 25.5 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 130 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

தொடக்கவீரரான டேவிட் வோர்ணர் 75 பந்துகளில், 7 பௌண்ட்ரிகளுடன் 57 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் சஜித் கான் பந்தில் எல்.பி. டபிள்யூ. ஆனார். மற்றொரு தொடக்க வீரரான உஸ்மான் கவாஜா ஓட்டம் எதுவும் சேர்க்காமல் நடையை கட்டினார். மோர்னஷ் லபுஷான் 73 பந்துக ளில், 9 பௌண்ட்ரிகளுடன் 62 ஓட்டங்களும், ஸ்ரீவ் ஸ்மித்4 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரை முழுமையாக 3-0 என கைப்பற்றி கிண்ணத்தை வென்றது. பெர்த்தில் நடைபெற்ற முதல்போட்டியில் 360 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், மெல்பர்னில் நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் 79 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் அவுஸ்திரேலிய அணி வெற்றி கண்டிருந்தது.

ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் அணியின் அமீர் ஜமால் தெரிவானார். அவர், துடுப்பாட்டத்தில் முதல் இன்னிங்ஸில் 82 ஓட்டங்கள் விளாசிய நிலையில் பந்து வீச்சில் 6 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். தொடர் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் தெரிவானார். அவர், இந்தத் தொடரில் 19 விக்கெட்களை வேட்டையாடி இருந்தார்.



## தொடக்க வீரராக களமிறங்க ஆசை

### ஸ்ரீவ் ஸ்மித்

மெல்பன், ஜன. 09

அவுஸ்திரேலிய அணியின் தொடக்க வீரரான டேவிட் வோர்ணர் பாகிஸ்தானுக்கு எதிரான தொடருடன் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். இருந்தபோதும் ரி-20 போட்டிகளில் அவுஸ்திரேலியாவுக்காக களமிறங்குவேன் என்று அறிவித்துள்ளார்.

டேவிட் வோர்ணர் ஓய்வு பெற்றுள்ளதால் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணிக்கு தொடக்க வீரராக களமிறங்க விருப்பத்துடன் இருப்பதாக ஸ்ரீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் ஸ்ரீவ் ஸ்மித் கூறியவை வருமாறு,

டெஸ்ட் போட்டிகளில் நான் தொடக்க வீரராக விளையாடுவதற்குத் தயாராக உள்ளேன். தொடக்க வீரராக களமிறங்கினால் மகிழ்ச்சியுடன் இருப்பேன். நிச்சயமாக தொடக்க வீரராகக் களம் இறங்குவதில் ஆர்வத்துடன் இருக்கிறேன். அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவுக்குழுவினர் என்னிடம் இதுகுறித்து பேசுவார்கள் என்று நம்புகிறேன் - என்றார். (ஐ)

## இந்திய ரி - 20 அணியில் ரோஹித், கோலிக்கு இடம்!

மும்பை, ஜன. 09

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ரி-20 தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியை கப்டன் ரோஹித் சர்மா வழிநடத்துகிறார். அணியில் விராட் கோலியும் இடம்பெற்றுள்ளார்.

ரோஹித் மற்றும் கோலி என இருவரும் கடைசியாக கடந்த 2022 ரி - 20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதியில் விளையாடி இருந்தனர். அதன் பிறகு இப்போதுதான் சர்வதேச ரி- 20 போட்டியில் விளையாடவுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ரி - 20 தொடரில் விளையாட உள்ளது. இந்த தொடருக்கான இந்திய அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது. இந்த அணியில் 16 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். வரும் ஜூன் முதலாம் திகதி மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் ரி -20 உலகக் கிண்ணத் தொடர் நடைபெற உள்ளது. இந்த தொடரில் ரோஹித்தும் கோலியும் விளையாடுவார்களா என்ற கேள்வி எழுந்திருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த ரி - 20 தொடர் வரும் 11, 14 மற்றும் 17 ஆகிய திகதிகளில் மொகாலி, இந்தூர் மற்றும் பெங்களூரில் நடைபெறவுள்ளது. இந்த அணியில் சிராஜ் மற்றும் பும்ராவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

**இந்திய அணி:**

ரோஹித் சர்மா (கப்டன்), ஷூப்மன் கில், யஷஸ்வி ஜெய்ஸ்வால், விராட் கோலி, திலக் வர்மா, ரிங்கு சிங், ஜிதேஷ் சர்மா (விக்கெட் காப்பளர்), சஞ்சு சாம்சன் (விக்கெட் காப்பாளர்), ஷிவம் துபே, வாஷிங்டன் சுந்தர், அக்சர் பட்டேல், ரவி பிஷ்னோய், குல்தீப் யாதவ், அர்ஷ்தீப் சிங், அவேஷ் கான், முகேஷ் குமார். (ஐ)







## விடைபெற்றார் வோர்ணர்

மெல்பர்ன், ஜன. 09

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தொடக்க வீரரான டேவிட் வோர்ணர் சிட்னியில் முடிவடைந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

37 வயதான அவர் 112 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 26 சதங்கள், 37 அரைச் சதங்களுடன் 44.59 சராசரியுடன் 8,786 ஓட்டங்கள் குவித்துள்ளார். வோர்ணரின் அதிக பட்ச ஓட்டம் ஆட்டமிழக்காமல் 335 ஓட்டங்களாகும்.

வோர்ணர் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும் இருபது - 20 போட்டிகளிலும் பிறீமியர் லீக் போட்டிகளிலும் விளையாடுவார். (ஐ)

## ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் ரபேல் நடால் விலகல்!

சிட்னி, ஜன. 09

பிரபல ரென்னிஸ் வீரர் ரபேல் நடால் சத்திர சிகிச்சை செய்ததால் ஏறக்குறைய ஓராண்டு சர்வதேச ரென்னிஸ் விளையாடவில்லை. பிரிஸ்பேன் ரென்னிஸ் மூலம் மறுபிரவேசம் செய்த அவர் காலிறுதியில் அவுஸ்திரேலிய வீரர் ஜோர்தன் தோம்சனிடம் தோற்று வெளியேறினார்.

இந்தப் போட்டியின்போது 37 வயதான நடால் மீண்டும் காயத்தில் சிக்கினார். பரிசோதனையில் தசைநாரில் மிக நுண்ணிய கிழிவு இருப்பது தெரியவந்துள்ளது. இதனால் வருகிற 14ஆம் திகதி மெல்பர்னில் தொடங்கும் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பனில் இருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

22 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான நடால், 2009, 2022ஆம் ஆண்டுகளில் அவுஸ்திரேலிய ஓப்பனை வசப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# கடற்கொள்ளையர் விரட்டியடிப்பு! சீனா பக்கம் சாயும் நாடுகளுக்கு இந்தியா உணர்த்துவது என்ன?

தீபக் மண்டல்

இந்திய கடற்படையின் எலைட் மரைன் கமாண்டோஸ் வெள்ளிக்கிழமையன்று வெற்றிகரமான நடவடிக்கை ஒன்றின் மூலம் லைபீரிய கொடியுடன் கூடிய கப்பலை கடத்தல்காரர்களிடம் இருந்து காப்பாற்றினர்.

எம்வி லீலா நார்ஃபோக் என்ற இந்த கப்பலில் இருந்த 21 பணியாளர்களில் 15 பேர் இந்தியர்கள்.

அந்த நடவடிக்கையின் போது கடத்தல்காரர்கள் யாரும் அங்கு கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும், மரைன் கமாண்டோக்கள் இன்னும் அவர்களைத் தேடி



வருகின்றனர்.

அரபிக்கடலில் இந்திய கடற்படையின் இந்த நடவடிக்கை குறித்து பல விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

அரபிக்கடலில் இந்தியா தனது வியூக ரீதியிலான முக்கியத்துவத்தை ஒரு பெரிய நடவடிக்கை மூலம் முதன் முறையாக உணர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

அரபிக்கடலில் இந்தியாவின் உத்தி ரீதியிலான நடவடிக்கைகளில் சுயாட்சிக்கான பிரகடனமாகவும் இது கருதப்படுகிறது.

அரபிக்கடலில் எத்தகைய சவாலையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ள இந்தியக் கடற்படையைத் தொடர்ந்து



பலப்படுத்தும் முயற்சியாக, மோடி அரசு இதனை முன் வைக்கிறது.

தற்போது செங்கடலில் கப்பல் கடத்தல்கள் அதிகரித்து வரும் நிலையில், ஹூத்தி கிளர்ச்சியாளர்களை எதிர்த்து அமெரிக்க கடற்படையினர் போராடி வருகின்றனர். அதேநேரம் அரபிக்கடலில் இந்திய கடற்படையின் இந்த நடவடிக்கையின் முக்கியத்துவம் மிகவும் அதிகரித்துள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அப்சர்வர் ரிசர்ச் ஃபவுண்டேஷனின் கடல்சார் கொள்கை முன்முயற்சியின் தலைவர் அபிஜீத் சிங், செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸிடம் பேசியபோது, 'சமீபத்திய நிகழ்வுகள் கடற்கொள்ளையர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கடற்படைகளின் கவனத்தை ஏடன் வளைகுடாவிலிருந்து செங்கடலுக்கு மாற்றுவது போல் தெரிகிறது," என்றார். இதை சாதகமாக பயன்படுத்தி, அரபிக்கடலில் கடற்கொள்ளையர்கள் தங்கள் நடவடிக்கையை அதிகப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்கா தலைமையிலான செங்கடல் பணிக்குழுவில் இந்தியா ஒரு அங்கமாக இருக்கவில்லை.

**இந்தியாவிற்கு அரபிக்கடலின் முக்கியத்துவம்**

அரபிக் கடல் என்பது இந்தியப் பெருங்கடலின் வடமேற்குப் பகுதி. இது மேற்கில் அரேபிய தீபகற்பத்திற்கும் கிழக்கில் இந்திய துணைக்கண்டத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. இது செங்கடலை ஓமன் வளைகுடாவுடன் இணைக்கிறது.

ஏமன், ஓமன், பாகிஸ்தான், ஈரான், இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகளின் எல்லையாக அரபிக் கடல் உள்ளது.

மேலும் பல முக்கியமான கப்பல் பாதைகளையும் துறைமுகங்களையும் இணைக்கும் கடல் பகுதியாகவும் அரபிக் கடல் விளங்குகிறது. எனவே இது சர்வதேச வர்த்தகத்திற்கு முக்கியமான பாதையாகத் திகழ்கிறது.

அரபிக் கடலில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வளங்கள் அதிக அளவில் உள்ளன என்பதுடன் இந்த பிராந்தியம் உலகிற்கு ஒரு முக்கிய ஆற்றல் வளமாகவும் உள்ளது.

ஈரான், இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் அரபிக்கடலில் கடற்படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அவை இங்கு பல கடற்படை தளங்களையும் கொண்டுள்ளன.

எனவே, பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு அரபிக் கடல் இந்தியாவிற்கு முக்கியமான கடல் பகுதி என்பதை மறுக்கமுடியாது.

ஆப்ரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இயற்கை



வளங்கள் மற்றும் ஆசிய நாடுகளின் தொழிலாளர் சந்தைகள் மற்றும் உற்பத்தித் தொழில்களுக்கு அரபிக்கடலில் ஸ்திரத்தன்மை மிகவும் முக்கியமானது. எனவே உலகப் பொருளாதாரத்தில் அதன் பங்கு மிகப் பெரியது என்றே சொல்லவேண்டும்.

சமீப காலமாக, இந்தியப் பெருங்கடலின் கரையோர நாடுகளின் வலுவான நட்பு நாடாக சீனா உருவெடுத்துள்ளது.

சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டத்தின் கீழ், கடல்சார் பட்டுப்பாதை அமைக்கும் முயற்சிகள் இந்த நாடுகளுக்கு இடையே பொருளாதார மற்றும் ராணுவ ஒத்துழைப்புக்கு ஒரு முக்கியமான தளத்தை வழங்கியுள்ளன.




இந்த நாடுகளில் சீனாவின் ஊடுருவல் அதிகரித்து வருவது இந்தியாவுக்கு கவலையளிக்கும் விஷயம்.

2017 இல், சீனா தனது முதல் வெளிநாட்டு ராணுவத் தளத்தை இந்தியப் பெருங்கடல் கடற்கரையில் உள்ள ஜிபூட்டியில் திறந்தது.

பிரான்ஸ், ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஏற்கனவே இங்கு கடற்படைத் தளங்களைக் கொண்டுள்ளன.

இங்கு சீனாவின் இருப்பு இந்த நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் சவாலாக மாறியுள்ளது.

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் சீன ஆய்வு மையத்தின் இணைப் பேராசிரியர் அரவிந்த் யெல்லேரி இது குறித்துக் கூறும்போது, "இந்தியாவும் பலமுறை இங்குள்ள சீன வணிகக் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளித்துள்ளது. இந்தியாவிற்கு அரபிக் கடல் முக்கிய பிராந்தியமாக இருப்பதால் அதை புறக்கணிப்பது மிகவும் கடி



னம். அரபிக்கடலில் இந்திய கடற்படைக்கு சவால் விடுவது அவ்வளவு எளிதானது அல்ல," என்றார்.

**கடற்கொள்ளையரை விரட்டியடித்த இந்திய கடற்படை**

கடந்த மாதம் அரபிக்கடலில் கடற்கொள்ளையர்களிடம் இருந்து மால்டா கப்பலை பாதுகாக்க இந்திய கடற்படை நடவடிக்கை எடுத்தது.

டிசம்பர் 23 அன்று, லைபீரியக் கொடியுடன் வணிகக் கப்பலான எம்வி கெம் ப்ளூட்டோ (MV Chem Pluto), ட்ரோன் தாக்குதல் நடத்தக் குறிவைக்கப்பட்டது. இந்த கப்பல் இந்தியாவின் மங்களூரு நகருக்கு வந்து கொண்டிருந்தது. அதன் 22 பணியாளர்களில் 21 பேர் இந்தியர்கள்.

இதற்குப் பிறகு, செங்கடலில் 25 இந்தியர்களை உள்ளடக்கிய எண்ணெய் டேங்கர் வகை கப்பலான எம்.வி. சாய்பாபாவும் ஆளில்லா விமானம் மூலம் தாக்கப்பட்டது.

இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் தற்போது இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதாகவும் இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

எனவே, இந்தியா பெரிய நடவடிக்கைகளை எடுப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்த சம்பவங்களை கருத்தில் கொண்டு, இந்தியா ஏற்கனவே தனது ஐந்து போர்க்கப்பல்களை அரபிக்கடலில் நிலைநிறுத்தி



யுள்ளது.

இதனுடன், ரோந்து விமானங்கள், மற்றும் ஆளில்லா விமானங்களும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அதாவது அரபிக்கடலில் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதை பொறுத்துக் கொள்ளும் நிலையில் இந்தியா இல்லை.

வெள்ளிக்கிழமை இந்திய கடற்படையின் கமாண்டோ நடவடிக்கை இதை நிரூபித்துள்ளது.

அரவிந்த் யெல்லேரி கூறுகையில், "இந்தியாவின் இந்த நடவடிக்கை மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்தது. முதலாவதாக, இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்கும் திறன் தனது கடற்படைக்கு இருப்பதைக் காட்ட இந்தியா விரும்புகிறது. இரண்டாவதாக, இந்தப் பாதையில் வணிகம் செய்யும் சர்வதேச கப்பல் நிறுவனங்களுக்கு இந்தியா தேவை என்ற நிலையில், அதன் பங்கை அவர்கள் புறக்கணிக்கக் கூடாது என்ற நிலையை உருவாக்க இந்தியா முயல்கிறது," என்றார்.

அரபிக்கடலில் இந்தியாவின் இந்த நடவடிக்கை வணிகக் கண்ணோட்டத்தில் மிகவும் முக்கியமானது. ஏனெனில் இங்கிருந்து வணிகக் கப்பல்கள் மத்திய தரைக் கடல் நோக்கிச் செல்கின்றன. பின்னர் சூயஸ் கால்வாயை நோக்கிச் செல்கின்றன. மேலும் இந்தப் பாதை உலகளாவிய வர்த்தகத்தின் ஒரு பெரிய விநியோகக் கோடு போல் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளை இணைக்கிறது.

**சீனா பக்கம் சாயும் நாடுகளுக்கு இந்தியா உணர்த்துவது என்ன?**

சமீப காலமாக, இந்தியப் பெருங்கடல் மற்றும் அரபிக்கடல் எல்லையில் உள்ள பல சிறிய நாடுகள் சீனாவின் பக்கம் சாய்ந்து வருகின்றன.

இந்தியாவின் இந்த நடவடிக்கை இந்த நாடுகளுக்கு ஒரு செய்தி என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தொடர்ந்து பேசிய அரவிந்த் யெல்லேரி, "அரபிக்கடல் மற்றும் இந்திய பெருங்கடல் கரையோரங்களில்

(16ம் பக்கம் பார்க்க)

# மீண்டும் அதிபர் தேர்தலில் புடின்: ஜார் ஆட்சியை தொடரும் புடின் ஆட்சி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் 2036 ஆம் ஆண்டு வரை பதவி வகிக்கும் வகையில் அரசியல் அமைப்பை திருத்த ரஷ்ய மக்கள் பெரும்பான்மையானோர் ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

**போரிஸ் யெல்ட்சின் பின்னர் புட்டின்:**

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் 1999 டிசம்பர் 31இல் போரிஸ் யெல்ட்சின் ( **Boris Yeltsin**) பதவி விலகியதை அடுத்து பதில் அதிபராக பதவிக்கு வந்தவர். பின்னர் 2000 ஆம் ஆண்டிலும், 2004 ஆம் ஆண்டு தேர்தலிலும் வெற்றி பெற்று அரசுத்தலைவரா கத்




தெரிவு செய்யப்பட்டார்.

ரஷ்ய அரசர்களை 'ஜார்' (**Tsar**) என்றே அழைப்பார்கள். ரஷ்யாவை ஆண்ட மன்னர் மகா பீட்டரை ( **King Peter the Great**) இன்றும் வியந்து போற்றுபவர் ரஷ்ய அதிபர் புட்டின். இது பரவலாக அறியப்பட்டது தான். ஆனால் இப்போது மகாபீட்டரைப் போன்றே தாம் செயல்படுவதாக பரவலாக கருத்தை வெளிப்படுத்தியும் வருகிறார்.

சமீப காலமாக ரஷ்யாவின் கடந்த கால ஜாராட்சி வரலாற்றை மேற்கோள் காட்டுவதையே புட்டின் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். தற்போதய ஆட்சியானது, மகா பீட்டரின் பேரரசைக் கட்டியெழுப்பும் திட்டம் என்றும் வெளிப்படையாக தெரிவித்து வருகிறார்.

2000 ஆம் ஆண்டில் இருந்து 2008 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக புட்டினின் பதவிக் காலம் மே 7, 2008 இல் முடிவடைந்ததைத் தொடர்ந்து புதிய தலைவர் டிமித்ரி மெட்வெடெவ் இவரை நாட்டின் பிரதமராக அறிவித்தார். நான்கு ஆண்டுகள் பிரதமராக இருந்த புட்டின் மீண்டும் 2012 மார்ச் 4 இல் இடம்பெற்ற தேர்தலில் மூன்றாம் முறையாக அரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் . இவரது பதவிக்காலம் 2012 மே 7 இல் தொடங்கியது. பிறகு 2018ஆம் ஆண்டு தேர்தலில் வென்று தற்போதும் ஆட்சியைத் தொடர்ந்து வருகிறார்.

**போரிஸ் யெல்ட்சினுடன் - புட்டின் உறவு:**

ரஷ்யா சோவியத் ஒன்றியமாக இருந்த போது அதன் உளவு அமைப்பான கேஜிபி-இல் புட்டின் பணியாற்றினார். 1991 ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியம் பிரிந்ததால், கொர்பசோவ் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார். புதிதாகப் பொறுப்பேற்ற போரிஸ் யெல்ட்சின் உடன் விளாடிமிர் புட்டின் உறவு சரியாக அமையவில்லை.

எனவே பணியிலிருந்து விலகி தனது உதவியாளரான மெட்வடேவ் உடன் இணைந்து புதிதாகக் கட்சி ஒன்றை துவங்கினர். 'சையூச்னய ரஷ்யா' என்று கட்சிக்கு பெயரிட்டார். 2000ஆம் ஆண்டு இவரது கட்சி ரஷ்யாவில் ஆட்சியை பிடித்தது.

2000 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து இரண்டு முறை ரஷ்யாவின் அதிபராக இருந்தார். அதற்குமேல் அந்த பதவியை வசிக்க ரஷ்ய நாடாளும் மன்றமான தூமா (**Duma**) அரசியல் சாசனப்படி வாய்ப்பில்லை. எனவே 2008 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு மெட்வடேவிற்கு அதிபர் பதவியைக் கொடுத்து




விட்டு பிரதமர் பதவியைப் பிடித்தார். நான்கு ஆண்டுகள் பிரதமராக இருந்த விளாதிமிர் புடின் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் 64 சதவீதத்திற்கு மேலான வாக்குகளைப் பெற்று மூன்றாம் முறையாக அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர்

**புடின் 2036 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி பதவியில் நீடிக்க மக்கள் ஆதரவு என ரஷ்ய தகவல்கள் தெரிவிக்கின்றன. உக்ரேனியப் போர் தொடர்கையில், மீண்டும் அதிபர் தேர்தலில் புட்டின் வெற்றி பெற்று ஏதோ ஓர் வகையில் ரஷ்யாவில் ஜாராட்சியை தொடர புட்டின் முயல்வது தெரிகிறது.**





2012 ஆம் ஆண்டு முதல் புட்டின் ரஷ்ய ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார்.

**பதவியில் நீடிக்க வாக்கெடுப்பு:**

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் 2036 ஆம் ஆண்டு வரை பதவி வகிக்கும் வகையில் அரசியல் அமைப்பை திருத்த பெரும்பான்மையானோர் ஆதரவு தெரிவித்துள்ளார்கள். தற்போது 71 வயதாகும் புட்டின் அவரது 87 ஆவது வயது வரை ஜனாதிபதியாக பதவி வகிப்பார்.

ரஷ்யாவில் ஜனாதிபதியாக விளாடிமிர் புட்டின் பதவிவகித்து வருகிறார். இவரது பதவிக் காலம் 6 ஆண்டுகள் ஆகும். ரஷ்ய நாட்டின் அரசியல் அமைப்பின்படி ஒருவர் இரு முறைக்கு மேல் ஜனாதிபதி பதவியில் நீடிக்க முடியாது. எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுவரை அவரது பதவிக்காலம் உள்ளது. இந்நிலையில் அவரது பதவிக் காலத்தை மேலும் இரு முறை அதாவது 2036 ஆம் ஆண்டு வரை 12 ஆண்டுகள் நீட்டிப்பது குறித்து அந்நாட்டு அரசியலமைப்பில் மாற்றம் செய்ய பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனினும் இந்த விவகாரத்தில் வாக்காளர்களின் ஒப்புதலும் மிகவும் முக்கியமானது என கூறிய புட்டின் வாக்கெடுப்பையும் நடத்தினார். இந்த வாக்கெடுப்பு நவம்பர்












25 ஆம் திகதி ஆரம்பமாகியது. 7 நாட்கள் நடைபெற்ற இந்த வாக்கெடுப்பில் புட்டினும் வாக்களித்தார்.

**அரசியல் அமைப்பு மாற்றம்:**

நடைபெற்ற வாக்கெடுப்பில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு நடைபெற்று வருகிறது. இதுவரை எண்ணப்பட்ட 98 சதவீதம் வாக்குகளில் புட்டினுக்கு ஆதரவாக 76.9 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர். 21 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் இந்த சட்டத்திருத்தத்திற்கு எதிராக பதிவு செய்துள்ளார்கள்.

இதனால் அவரது பதவிக்காலம் நீட்டிக்கப்படுவதற்கு மக்களின் ஆதரவு கிடைத்துவிட்டது. பொது வாக்கெடுப்பு எனினும் இதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இந்த வாக்கெடுப்பே பொய்யானது என தெரிவித்துள்ளனர்.

தற்போது 71 வயதாகும் புட்டின் அவரது 83 ஆவது வயது வரை ஜனாதிபதியாக பதவி வகிப்பார். இதுகுறித்து சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் எல்லா பாம்பிலோவா கூறுகையில் இந்த வாக்கெடுப்பு வெளிப்படைத்தன்மையுடன் நடந்தது என்றார்.

**ஜார் மன்னரை போன்று புட்டின்:**

ரஷ்ய பேரரசை நிறுவ 1547 இல் இவான்- ஐஏ ஜார் மன்னர் பட்டத்தை ஏற்றுக்கொண்டார். பின்னர் 1721 இல் பீட்டர் - ஐ ரஷ்யாவின் ஜார் மன்னரின் ஆட்சி, ஒரு மையப்படுத்தப்பட்ட ரஷ்ய அரசாக இருந்தது. இந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

# கடற்கொள்ளையர் விரட்டியடிப்பு!...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

சீனாவின் பக்கம் சாய்ந்துள்ள - இந்தியா இங்கு தன்னிச்சையாக செயல்படுவதாக கருதும் சிறிய நாடுகளுக்கும் ஒரு செய்தி கொடுக்கப்பட்டுள்ளது.

நீங்கள் என்ன சொன்னாலும் இங்குள்ள கடல் வழிகள் மற்றும் தகவல் தொடர்புகளை இந்தியா கட்டுப்படுத்துகிறது என்று இந்த நடவடிக்கையின் மூலம் இந்தியா தெளிவான செய்தியை கொடுத்துள்ளது. எனவே, தேவைப்பட்டால் இந்தியாவைத் தான் உதவிக்கு அழைக்க வேண்டும். சீனா ஓடிவிடும் என்ற செய்தியை இந்திய தற்போது அளித்துள்ளது.

உண்மையில், அரபிக் கடல் இந்தியாவின் பிராந்திய அல்லது பிரத்யேக மண்டலத்திற்கு அருகில் உள்ளது. சீன கடற்படை இங்கு வரவும் முடியாது- அதை இங்கு நிறுத்தவும் முடியாது. அது இங்கு நீண்ட கால அளவில் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது.

மேலும் பேசிய அரவிந்த் யெல்லேரி, 'இந்தியாவால் மட்டுமே இப்பகுதியில் நீண்ட கால அடிப்படையிலான செயல்பாடுகளை மேற்கொள்ள முடியும். குறிப்பாக கப்பல்களின் சுழற்சி, எரிபொருள் நிரப்புதல், படகுகள் மற்றும் கடலோர காவல்படைகளின் இயக்கம், மாலுமிகளை மாற்றுதல் போன்றவற்றைக் கூறமுடியும். இப்பகுதி இந்தியாவின் உரிமை. சீனா இந்த வேலையை இங்கு செய்ய முடியாது." என்றார்.

**இந்திய கடற்படையின் பலம்**

இந்திய கடற்படையின் வலிமை மற்றும் திறமைக்கு இந்த நடவடிக்கையும் சான்றாகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

புகழ்பெற்ற மூலோபாய நிபுணரும், கொள்கை ஆய்வு மையத்தின் இயக்குநருமான சி.உதய் பாஸ்கர் கூறுகையில், "அரபிக் கடலின் சோமாலியா கடற்கரை பகுதியில் இந்திய கடற்படை மேற்கொண்ட இந்த நடவடிக்கை இந்திய கடற்படையின் நம்பகத்தன்மையையும் திறனையும் உறுதிப்படுத்தியுள்ளது. இப்போது இல்லையென்றால், இது போன்ற நடவடிக்கையை இந்தியா எப்போது மேற்கொள்ள முடியும்? ஏனெனில் இந்தியா தனது கடற்படையை வலுப்படுத்த பெரும் முதலீடுகளை செய்துள்ளது," என விளக்கினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியா கடற்படை மற்றும் கடலோர காவல்படையை பலப்படுத்தியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அது இந்த நடவடிக்கை மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ●

# மீண்டும் அதிபர் தேர்தலில் புடின்:...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

காலகட்டத்தில் ரோமானோவ் வம்சங்களுக்கு மாறிய எழுச்சிகள், போலந்து-லிதுவேனியன், ஸ்வீடன் மற்றும் ஒட்டோமான் பேரரசு உடனான போர்களை வென்றது. அதேவேளை சைபீரியாவை ரஷ்யா கைப்பற்றியது.

1689 இல் ஆட்சியைப் பிடித்த பீட்டர் தி கிரேட் ஆட்சி ஒரு பாரிய ஐரோப்பிய சக்தியாக மாற்றியது. பெரிய வடக்குப் போரின் போது, அவர் கணிசமான சீர்திருத்தங்களைச் செயல்படுத்தினார். பின்னர் 1721 இல் சுவீடனை வென்ற பிறகு ரஷ்ய சாம்ராஜ்யத்தை விரிவு படுத்தி அறிவித்தார்.

இதனாலேயே ரஷ்ய அதிபர் புட்டின் எப்போதும் ஜார் மன்னர் மகா பீட்டரை வியந்து போற்றுபவர். ஆனால் இப்போது மகாபீட்டரைப் போன்றே தானும் செயல்படுவதாக கருத்து தெரிவித்துள்ளார்.

**புட்டின் ரஷ்ய ஜார் மன்னராக!**

அதேவேளை மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு மகா பீட்டர் நடத்திய போர்களுடன் இன்று தாம் நடத்திக் கொண்டிருக்கும் உக்ரேனியப் போரை புட்டின் வெளிப்படையாகவே ஒப்பிடுகிறார். ரஷ்யாவின் கடந்த கால வரலாற்றை மேற்கோள்காட்டுவதையே புட்டின் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். இன்றைய காலகட்டத்துக்கு ஏற்றவாறு அதைப் பொருத்திப் பேசுகிறார்.

இப்போது புட்டின் தனது உக்ரேன் போர் நடவடிக்கை என்பது உண்மையில், ஜார் மன்னர் மகா பீட்டரின் நவகால வாரிசு என்பதை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு துணிந்திருக்கிறார். மகா பீட்டர் பால்டிக் முதல் கருங்கடல் வரையிலான் நிலத்தை கைப்பற்றி ஆண்டவர். ஆனால் ரஷ்யா தொடங்கிய வடக்குப் பெரும் போர் 21 ஆண்டுகளாக நீடித்திருந்தது. ரஷ்யாவை நவீனப் படுத்துவதற்காக ரகசியமாக ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பயணம் செய்தவர் மகா பீட்டர், செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கை ரஷ்யாவின் புதிய தலைநகராக அவர் உருவாக்கியபோது ஓர் ஐரோப்பிய நாடு கூட அதை அங்கீகரிக்கவில்லை.

**உக்ரைன் மீதான போர் :**

மகா பீட்டர் ஒரு சர்வாதிகாரியாக அறியப்பட்டாலும், மேற்கத்திய சித்தாந்தங்களையும், அறிவியல், பண்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளக்கூடியவர். ஐரோப்பாவின் வாசற்படியாக செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கை உருவாக்கினார். ரஷ்யாவை நவீனப்படுத்த ஐரோப்பா முழுவதும் பயணம் மேற்கொண்டிருந்தார்.

ஆனால் புட்டினின் தொடர்ச்சியான ஆட்சியில் மன்னர் பீட்டர் உருவாக்கிய வாசற்படி மெதுவாகத் மூடத் தொடங்கியது. உக்ரேன் மீதான போர் மீதமிருந்ததையும் மூடிவிட்டது என்றே கருதலாம்.

மேற்கத்திய எதிர்ப்புகளையும் பொருளாதாரத் தடைகளையும் எதிர்கொள்வது என்பதில் ரஷ்யா உறுதியாக உள்ளது. உக்ரேனியப் போர் முடிவுற்றாலும் மீண்டும் அதிபர் தேர்தலில் புட்டின் வெற்றி பெற்று, 2036ஆண்டு வரை ஆளும் வாய்ப்பு உள்ளது. ஏதோ ஓர் வகையில் ரஷ்யாவில் ஜாராட்சியை தொடர புட்டின் முயல்வது தெரிகிறது.

ஜார் மன்னர் மகா பீட்டரை வியந்து போற்றுபவதுடன், அதே வழியில் செல்லும் புட்டினுக்கு வரலாற்றுப் புத்தகங்களிலிருந்து இன்னொரு பக்கம் கிடைக்கலாம். ●





